மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 30 ஞாயிற்றுக்கிழமை (16.12.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 362



13-வது அரசியல் திருத்தச் சட்டம் ஜனவரியில் அமுல்

வட.-கிழக்கு இடைக்கால நிர்வாகத்தை டக்ளஸிடம் ஒப்படைக்க ஜனாதிபதி முடிவு

ஜனாதிபதி செயலகம் நேற்றுத் தெரிவிப்பு

(கொழும்பு)

13-வது அரசியல் திருத்தச் சட்டம் ஜனவரியில் அமுல் படுத்தப்படும். வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகத் தைத் தனித்தனியாக ஏற்படுத்தி அதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஒப்படைக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் நேற்றுத் தெரி வித்தது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பசீர் மற்றும் நிஜாமுதீன் நீக்கம்!

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரதி அமைச்சர்களான பசீர் மற்றும் நிஜா முதீன் ஆகியோர் விலக்கப்பட்டுள்ளதாக சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள் ளது.

2008 ஆம் ஆண்டுக்கான வரவு-செல வுத் திட்டத்தின் போது மேற்குறிப்பிட்ட இருவ ரும் கட்சியின் முடிவுக்கு அமைவாகச் செயற் படத் தவறியமையைக் காரணம் காட்டி கட்சி யிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் கட்சியின் தீர்மானத்திற்கு ஏற்ப எதிர்த்து நான்கு பேர் வாக்களித்தனர். ஆதரவாக மேற்குறிப்பிட்ட இருவரும் வாக்களித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

வாகன விபத்தில் சிக்கி இரு விமானப்படையினர் பலி

(கொழும்பு)

வான்படையினரின் வாகனம் ஒன்று நேற்று விபத்துக்குள்ளானதில் இருவர் உயி ரிழந்துள்ளதுடன் 14 பேர் படுகாயமடைந்துள் ளனர்.

அநுராதபுரம் மொறவெவ வீதியில் அமைந்துள்ள மொறவெவ வான்படை முகா மைச்சேர்ந்தோர் பயணித்த வாகனம் நேற் றுக்காலை விபத்துக்குள்ளானது.

இதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 14 பேர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாக அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ச-5)

புலிகள் மீதான தடையை நீடிக்க இந்தியாவில் நடக்கும் கைது நாடகம்

ஜூனியர் விகடன் தெரிவிப்பு

(சென்னை)

தமிழ் நாட்டில் திடீரென விடுதலைப் புலிகள் மற்றும் புலிகளுடன் தொடர்புடை யோர் எனக் கூறி மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கைகளின் பின்னணியை தமிழ் நாட்டின் பிரபல் வார இருமுறை இதழான ஜூனியர் விகடன் அம்பலப்படுத்தியிருக்கி றது.

ஜூனியர் விகடன் இதழில் வெளியாகிய செய்தியில் எதிர்வரும் மார்ச் மாதத்தோடு இந் தியாவில் புலிகள் இயக்கத்துக்கான தடை முடிகின்றது.

அதை மறுபடி ஓராண்டு நீடிக்க வேண்டு மானால் புலிகளின் நடமாட்டம் பற்றிய வலு வான சம்பவங்கள் தேவையாகும். அதற்கா கக் கூட ஏதோ நடக்கிறதோ என்று அந்த இயக்கத்தின் அநுதாபிகளுக்கு ஒரு சந் தேகம் என்று *(08ஆம் பக்கம் பார்க்க)*

ஈராக்கில் கைது செய்யப்பட்ட 21 பேரும் நாடு திரும்பினர்

(கொழும்பு)

ஈராக்கில் கைது செய்யப்பட்ட இலங்கை யர்கள் 21 பேரும் நேற்று மதியம் நாடு திரும் பினர். ஈராக்கில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிர யோகச் சம்பவம் ஒன்றின் பேரில் இவர்கள் கடந்த மாதம் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

அதன் பின்னர் இவர்கள் அனைவரும் சட்டவிரோதமாகவே ஈராக் சென்றுள்ளதாக வும் தெரியவந்தது.

நாடு திரும்பிய இவர்களிடம் வாக்குமூலம் பெற்றுவிட்டு வீடு திரும்ப அனுமதித்ததாக குடிவரவு குடியகல் *(08ஆம் பக்கம் பார்க்க)*

மட்டக்களப்பு எம்.பிக்களின் உறவினர்கள் நேற்றிரவு விடுதலை

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கள் மூவரின் உறவினர்கள் நேற்றிரவு 7.30 மணியளவில் விடுதலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப் பில் பங்கேற்கக் கூடாது எனத் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேந்திரனின் சகோதரர், தங்கேஸ்வரி எம்.பியின் செயலாளர் மற்றும் ஜெயானந்த மூர்த்தி எம்.பியின் சகோதரியின் மகன் ஆகி யோர் கடந்த 12 ஆம் திகதி ஆயுதக் குழு ஒன் றினால் *(08ஆம் பக்கம் பார்க்க)*

பாகிஸ்தானில் நெருக்கடி நிலை நேற்று இரத்துச் செய்யப்பட்டது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நெருக்கடி நிலை நேற்று இரத்துச் செய்யப்பட்டது. இதற்கான உத்தர வில் அதிபர் முஷாரப் கையெழுத்திட்டுள்ளார். பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தனது அதிகாரத் தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக கடந்த நவம்பர் 3 ஆம் திகதி நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்தார்.

மேலும் அரசியல் சாசனத்தையும் தற்கா லிகமாக இரத்துச் செய்த அவர், தலைமை நீதிபதியைப் பதவி நீக்கம் செய்து எதிர்க்கட்சி யினரையும் சிறையில் அடைத்தார்.

எனினும் சர்வதேச நாடுகளின் நெருக்கடி காரணமாக முஷாரப் ஜனவரி 8 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என அறிவித்தார். மேலும் *(08ஆம் பக்கம் பார்க்க)*

ஆயுத உதவிகளை சர்வதேசம் நிறுத்தினால் அரசினால் போர் செய்ய முடியாத நிலை ஏற்படும்

அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கை அரசுக்கான இராணுவ உதவி களைச் சர்வதேச நாடுகள் நிறுத்துமானால் அரசு போர் செய்ய முடியாத நிலை ஏற்படும். இதன் காரணமாகத் தமிழ் மக்கள் மீது அரசு தொடுத்துள்ள போரை நிறுத்த முடியுமென தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து வெளிவரும் ஈழ நாதம் நாளிதழின் வெள்ளிநாதத்திற்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இத னைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறி யுள்ளதாவது,

திட்டமிட்ட வகையில் தமிழர் தாயகப் பிர தேசத்தில் அரசு வான் தாக்குதலையும் ஆ ஊடுருவும் படையினரைப் பயன்படுத்திக் கிளைமோர்த் தாக்குதலையும் தீவிரப்படுத்தி யுள்ளது. இது ஒட்டுமொத்தத் தமிழர்களை யும் அழித்தொழிக்க குறிப்பாக இளையவர்க ளை அழித்தொழிக்க அரசு பெரும் விருப் பைக் கொண்டு *(02 ஆம் பக்கம் பார்க்க)*

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

பொது நிர்வாகத்துறையில் காணப்படும் குறைபாடே நாட்டின் வீழ்ச்சிக்கு காரணம்

வஜிர எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரபாகரனை கொன்றதன் பின்னரே பொருளாதார அபிவிருத்தி ஏற்படுமென அரசாங்கம் கூறுவது முட்டாள்தனமாகும் என ஜக்கிய தேசியக் கட்சி எம்.பி வஜிர அபேவர் தன தெரிவித்தார்.

பொதுநிர்வாகத்துறையில் காணப்படும் குறைபாடுகளை நாட்டின் வீழ்ச்சிக்கு காரணம் என அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்திற்கு பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய வஜித அபேவர்த்தன எம்.பி மேலும் கூறியதாவது,

நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் பிரபாகரனே காரணம், பொருளாதார வீழ்ச்சிக்கும் அவரே காரணம். எனவே அவரை கொல்வதன்மூலமே நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என அரசாங்கம் கூறுவது முட்டாள்தனமானது.

அரசாங்க நிர்வாகத்தின் பொறிமுறை முற்றாக வீழ்ச்சியடைந்தமையே பிரச்சினைகளுக்கு காரணம் என அரசாங்கத்தை தவிர அனைவரும் நன்றாக விளங்கிக் கொண்டுள்ளனர்.

வரவு செலவுத்திட்டமானது நாட்டின் எந்த மட்டத்திலுள்ள மக்களுக்கும் எவ்வித பயனு மற்றது. இதனால் எந்தவிதமான முன்னேற்றத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு வினைத்திறனுடன் செயற்பட்டால்மாத்திரமே நாடு அபிவிருத்தி அடைய முடியும்.

இந்த அரசாங்கத்தின் காலத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கையும்,மது அருந்துவோரின் எண்ணிக்கையும், விலைவாசியுமே அதிகரித்துள்ளது.

ஐ.தே.க.ஆட்சிக்காலத்தில் பொது நிர்வாகத்துறை சிறப்பாக செயற்பட்டது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம்மீது அபாண்டமான பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளது.

எமது ஆட்சிக்காலத்தில் நிர்வாகத்தையும் அரச ஊழியர்களையும் ரூபாயையும் வலுவூட்டினோம். தற்போது தமது பிள்ளைகளுக்கு புத்தகங்களைக் கூட வேண்டிக் கொடுக்க முடியாத நிலையில் அரச ஊழியர்கள் உள்ளனர்.

நாம் அரச ஊழியர்களுக்கு 13 மாத சம்பளத்திட்டத்தை கொண்டு வரவிருந்தோம் ஆனால் அது சுதந்திரக்கட்சியால் தடுத்து நிறுத்தப்பட்டது.

1970-1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரத்திற்கு என்ன நடந்தது. அதற்கு காரணம் பிரபாகரனா? ஏனெனில் பிரபாகரனைக் கொன்றாலே அபிவிருத்தி சாத்தியம் என அரசாங்கம் கூறி வருகிறது.

இவை மக்களை ஏமாற்றுவதற்கான கட்டுக்கதைகள். பிரபாகரனைக் கொல்வதனால் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை.

ஆனால் இன்று பிரபாகரனை வைத்து அரசாங்கம் அரசியல் நடத்துகின்றது. (அ-5)

பட்டதாரிகளின் போட்டிப் பரீட்சை முடிபுகள் 25ஆம் திகதி வெளியாகும்

தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சைகளின் பெறுபேறுகள் கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைத்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாகாண பாடசாலைகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடத்தப்பட்ட பெறுபேறுகள் 25 ஆம் திகதி கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்படும்.

இப்பரீட்சைக்கு 34 ஆயிரம் பட்டதாரிகள் தேற்றியுள்ளனர். 8 ஆயிரம் பரீட்சார்த்திகள் தங்களுக்கு விருப்பமான 10 பாடசாலைகளை குறிப்பிடப்படாததினால் அவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன எனவும் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அநுர ஸ்ரீதிரிசிங்க தெரிவித்தார்.

அடுத்த வருட முற்பகுதியில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-6)

கண்டாமணி கோபுர நூதனப் பிரதிஷ்டா விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான கண்டாமணி கோபுர நூதனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று நண்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். முன்னதாக காலை 8.00 மணிக்கு கிரி யை ஆரம்பமாகி யாகபூசையும் இடம் பெறும். (ச)

துடுப்பாட்ட சங்க நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட மத்தியஸ்தர் தர எழுத்துப் பரீட்சைக்கு தோற்றிய தேர்வு நாடிகளுக்கான நேர்முகத் தேர்வும், செய்முறைத் தேர்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என செயலாளர் எஸ்.விமலதாசன் தெரிவித்துள்ளார். (ச)

பசுமாடு திருட்டு

(யாழ்ப்பாணம்)

பசுமாட்டை திருடியவர்கள் அதனை இறைச்சிக்காக வெட்டியுள்ளனர். கொக்குவில் கிழக்கு நந்தாவில் ஒழுங்கையைச் சேர்ந்த லோகன் என்பவரின் வளர்ப்பு மாடே திருடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வளவினுள் நுழைந்த திருடர்கள் வேலியை வெட்டி மாட்டைத் திருடிச் சென்றுள்ளனர். நேற்றுக்காலை மாட்டைக் காணாது தேடிச்சென்றபோது அயலில் உள்ள பற்றைப் பகுதியில் மாடு வெட்டப்பட்டு அதன் உடற்பகுதிகள் சில கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஏ)

அரியுத உதவிகளை சர்வதேசம் நிறுத்தினால்...

ள்ளதையே காட்டுகின்றது.

இதனைத்தான் வள்ளிப்புனம் செஞ்சோலைவளாகத்தில் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலும் நயன்கன் குளத்தில் மாணவிகள் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலும் மற்றும் தொடரும்ஏனையதாக்குதல்களும்சுட்டிக்காட்டுகின்றன.

இராணுவக் கூட்டுப்பாட்டுப் பகுதிகளில் புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், மத போதகர்கள் போன்றோரை இலக்கு வைத்து இன்னுமொரு வகையான தாக்குதல்களையும் மேற்கொள்கின்றனர். இது அரசானது தமிழரின் ஆற்றல்மிகு வளத்தை அழித்தொழிக்க எடுக்கும் நடவடிக்கையாகும்.

இதனை நாம் விரைந்து தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு எல்லோருமே போராட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எல்லோரும் போராடுவதன் மூலமாகவே எமது பிரதேசங்களை மீட்டு எமது மக்களினதும் எமது மண்ணினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தக் கள யதார்த்தத்தை எமது மக்கள் தட்டிக் கழிக்காது எமக்குத் தோள் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. ஈழத்தின் வரலாற்றில் நெருக்கடி மிகு காலங்களில் எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் எமக்கு ஆதரவு சக்தியாகவே இருந்து வருகின்றனர். இப்போதும் தமிழ்நாட்டில் எமக்குச் சார்பான,ஆதரவான பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

இந்தச் செயற்பாட்டில் அங்குள்ள பல அரசியல் கட்சிகளும் இணைந்து செயற்படுவது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. எமது மக்கள் துன்பப்படும் வேளைகளில் எல்லாம் எமக்குத் தமிழ்நாட்டிலிருந்து நீளும் ஆறுதல் கரத்தை நாம் பற்றிப் பிடிப்பதுடன் அதனை நாம் எதிர்பார்க்கவும் செய்கின்றோம்.

ஈழத்தமிழ் மக்களுக்குத் தமிழ்நாட்டிலிருந்து வரும் ஆதரவும் அனுசரணைக் குரலும் எமது எதிரிகளுக்கு அச்சம் ஊட்டுவதாகவேயுள்ளது. இதனை நாம் கூற வில்லை. எதிரியே கூறி வருகின்றான். அத்தோடு எமது தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மறைவுக்கும் எமது முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களின் மறைவுக்கும் தமிழ்நாட்டிலிருந்து எழுந்த உணர்வலைகள் ஈழத்தமிழ் மக்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்குமான உறவின் பிணைப்பை, அரசியல் தாக்கத்தை வெளிப்படுத்துவதாகவிருந்தது.

இவ்வேளைகளில் எல்லாம் தமிழ்நாட்டு மக்களும் அங்குள்ள தமிழின ஆதரவாளர்களும் தமது அரசியல் வேறுபாடுகளை எல்லாம் களைந்து குரல்கொடுப்பதானது எமக்கு நம்பிக்கையூட்டுவதாக உள்ளது. இத்தகைய உறுதியான பிணைப்பை தமிழீழ மக்கள் ஒரு பெரும்போருக்கு முகம் கொடுத்து வரும் வேளை தமிழ்நாட்டு மக்கள் வெளிப்படுத்துவதானது தமிழீழ மக்களின் போராட்டத்தின் நியாயத் தன்மைக்குத் தமிழ் நாட்டு மக்கள் வழங்கும் ஆதரவாக இருக்கும்.

இது பல்வேறு வழிகளிலும் தமிழீழ மக்களுக்கு உதவியாகவிருக்கும். எனவே தொடர்ந்தும் தமிழ்நாட்டு மக்கள் தமது அன்பையும் ஆதரவையும் பல்வேறு வழிகளிலும் வெளிப்படுத்த வேண்டுமென்றார்.

மகிந்த அரசின் புதுவருடத் திட்டம் எதுவாகவிருக்குமென கருதுகிறீர்கள் எனக் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில்,

மகிந்த அரசு இன அழிப்பைத்தான் புது வருடத் திட்டமாகவும் வைத்திருக்கின்றது. மகிந்த அரசின் புது வருடத் திட்டத்தை நாம் எதிர்வு கூறக் கூடியதாகவேயுள்ளது.ஏனெனில் அவர்கள் இப்பொழுதும் இராணுவ உதவியைப் பெறுவதிலும் இராணுவத் தீர்வு குறித்துப் பேசுவதிலுமே தமது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றனர்.

இதற்காக அரசு தனது வரவு-செலவுத் திட்டத்தில் போருக்கு எனறுமில்லாதவாறு பெருந் தொகை நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள அவ்வளவு பெரிய நிதி ஒரு இனத்தை அழிப்பதற்காக ஒரு அரசு இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கீடு செய்யுமா? என புருவம் உயர்த்த வைக்கின்றது.

அந்தளவுக்கு அரசு போரின்மீது வெறி கொண்டுள்ளது. இதனூடாக அரசானது வன்னி மீது ஒரு பெரும் போரை தொடுத்து வன்னி மண்ணை கபளீகரம் செய்து இங்கு தனது தமிழின அழிப்பை பூர்த்தி செய்து விடலாம் எனக் கருதுகின்றது.

இந்த விருப்பானது மகிந்த ராஜபக்ஷவின் விருப்பம் மட்டுமல்ல. சிங்கள ஆட்சியாளர்கள் எல்லோருடைய விருப்பமும் கூட இதுவே. ஆனால் இந்த ஆசை ஒரு போதும் நிறைவேறப் போவதில்லை. இதனைத்தான் தமிழீழ மாவீரர் நாள் உரையில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

'நில அபகரிப்பு என்ற பேரில் சிங்கள தேசம் மீளவும் விழுந்திருக்கின்றது. இதன் பாரதூரமான விளைவுகளை அது விரைவில் சந்தித்தே ஆகவேண்டி வரும்' என எச்சரித்துள்ளார்.

இதனை நாம் எமது மக்களின் எழுச்சியோடும் துணையோடும் சிங்கள தேசத்தின் இராணுவ மமதைக்குத் தக்க பதில் கொடுப்போம். இதன்மூலம் அவர்களின் கனவு ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை என்பதை மீண்டும் நாம் உறுதிபட நிரூபிப்போம். இதற்கு எமது விடுதலை இயக்கமும் எமது மக்களும் அனுமதிக்கப் போவதில்லை.மகிந்த சிந்தனை ஒருபோதும் எமது மண்ணில் நிறைவேறாது என்றார்.

அரசானது இங்கு இயங்கி வருகின்ற பல தொண்டு நிறுவனங்கள் மீது உண்மைக்கு மாறான பல குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி வருவதோடு பலவிதமான விமர்சனங்களையும் மேற்கொண்டு வருவதை நாம் அவதானித்து வருகின்றோம்.

இந்த அனைத்துலக தொண்டு நிறுவனங்களைத் தொடர்ந்து இங்கு இயங்க முடியாதவாறானதொரு நெருக்கடியைத் திட்டமிட்டு அரசு மேற்கொண்டு வருவதையும் நாம் காண்கின்றோம்.அரசின் இந்த நடவடிக்கையானது சில உள்நோக்கங்களைக் கொண்டிருப் பதாகவே நாம் எண்ணுகின்றோம்.

அதாவது தமிழர் தாயகப் பகுதிகளிலும் தென்னிலங்கையிலும் அரசு தமிழர்களைக் கடத்துதல்-படுகொலை செய்தல்-உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தல்-நியாயமற்ற கைதுகள் மேற்கொள்ளல் என ஒருதொடர்ச்சியான தமிழின அழிப்பை மேற்கொண்டு வருகின்றது.

இந்தத் தமிழின அழிப்பு நடவடிக்கைகளை இங்கு இயங்கி வருகின்ற இந்த அனைத்துலக தொண்டு நிறுவனங்கள் வெளிப்படுத்தி வருவதானது சர்வதேச ரீதியில் அரசுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த நெருக்கடிகள் காரணமாக சினம் கொண்டுள்ள அரசு இந்த உண்மையை வெளிப்படுத்துகின்ற அனைத்துலக தொண்டு நிறுவனங்களைக் தண்டிக்க விரும்புகிறது.

இதன் காரணமாக அரசு நேரடியாக இவ் அமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அதேவேளை தென்னிலங்கையிலிருக்கின்ற ஜே.வி.பி. மற்றும் ஹெலஉறுமய போன்ற இனவாதக் கட்சிகளைத் தூண்டி இவ் அமைப்புகள் புலிகள் இயக்கத்திற்கு உதவுகின்றன என்ற குற்றச்சாட்டை ஊக்குவித்துள்ளது.

உண்மையில் அரசின் இந்த நடவடிக்கையானது அனைத்துலக அமைப்புக்களை இங்கிருந்து வெளியேற்றும் நோக்கம் கொண்டது என்பதை விட அவர்களின் வாயை அடக்குவதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

குறிப்பாக யுனிசெவ் மற்றும் அதனோடு இணைந்த ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்புபட்ட அமைப்புகள் மீது கடும் குற்றச்சாட்டுக்களை அரசு மேற்கொள்வதானது இவ்வமைப்புக்கள் கிழக்கில் சிறுவர்களை துணை இராணுவக்குழுக்கள் படையில் இணைத்து வருகின்றமை அது படையினரின் ஒத்துழைப்புடனும் பாதுகாப்புடனுமே மேற்கொள்ளப்படுகின்றது என்ற உண்மையை வெளிப்படுத்தி விட்டதோடு ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு பிரதிநிதிகளாக இங்கு பயணம் செய்த அதன் அதிகாரிகள் ஜோன் ஹோம்ஸ், நோவாக் போன்றவர்கள் இதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தி அரசை கண்டித்ததோடு ஐக்கிய நாடுகள் சபையில அரசுக்கு எதிரான அறிக்கைகளையும் சமர்ப்பித்துள்ளனர்.

இதன்காரணமாக அரசு கொதிப்படைந்துள்ளது, கோபமடைந்துள்ளது. இதன் காரணமாகவே இந்த அமைப்புக்களின் செயற்பாடுகளை முடக்கி அரசு இங்கு இழைக்கின்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகள்குறித்த அனைத்துலக சமூகத்தின் கண்டனங்களை தடுத்து மனித உரிமை மீறல்களை மூடி மறைக்கலாம் எனக்கருதுகிறது.

கண்காணிப்புக் குழுவும் இணைத் தலைமை நாடுகளும்.

கண்காணிப்புக்குழுவின் செயற்பாட்டைப் பொறுத்தவரை அவர்கள் செயற்படாதவாறு அரசே முடக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக அரசு யுத்த நிறுத்த மீறல்களை மேற்கொள்கின்ற இடங்களுக்கு கண்காணிப்புக் குழுவினரை செல்லவிடாது தடுத்து யுத்த நிறுத்த மீறல்களை மறைத்து வருகிறது.

கண்காணிப்புக்குழுவினரின் பாதுகாப்புக்குக் கூட ஆபத்து ஏற்படுத்தும் விதத்தில் அரசு செயற்பட்டு வருகிறது. முன்னாள் கண்காணிப்புக்குழுத்தலைவர் உல்வ் ஹென்றிக்சன் மாவிலாற்றுப் பகுதிக்கு பயணம் செய்த போது கண்காணிப்புக்குழுத்தலைவரை குறிவைத்து எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டு கொலை செய்ய முயற்சித்தது.

பூநகரிப்பிரதேசத்திற்கு அரசின் அனுமதியுடன் தற்போதைய கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜோன் சொல்பேர்க் பயணம் செய்தபோது அவரைக் குறிவைத்து எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டு அரசு கொலை செய்ய எத்தனித்தது.

அத்தோடு இரண்டு தரப்பிற்கிடையே செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மூலமாக உருவாக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவை அரசு அடக்கவும் அதட்டவும் முற்படுவதன் மூலமும் அரசின் கீழ் இயங்கும் ஒரு பிரிவாக கண்காணிப்புக் குழுவை சிறுமைப்படுத்த முற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கண்காணிப்புக் குழுவினரின் செயற்பாட்டை சுருங்கச் செய்யும் அவர்களின் செயற்பாட்டைத் தடுத்தும் யுத்தத்தை முன்னெடுத்தும் வருகின்றது. ஆனால் எம்மைப்பொறுத்தவரையில் நாம் கண்காணிப்புக் குழுவினரின் செயற்பாட்டை மதித்து நடப்பதுடன் தேவை ஏற்படுகின்ற வேளையெல்லாம் அவர்களுடன் சந்திப்புக்களை மேற் கொண்டு வருகிறோம்.

அண்மையில் நான் அரசியல்துறைப் பொறுப்பாளராக பொறுப்பேற்றவுடன் தேசியத் தலைவரின் பணிப்பிற்கமைய கண்காணிப்புக்குழுத்தலைவரை இங்கு அழைத்து சந்திப்பை மேற்கொண்டிருந்தேன். ஆனால் அரசானது கண்காணிப்புக்குழுவினர் சுதந்திரமாக இங்கு பயணம் செய்யமுடியாதவாறு தடைகளை ஏற்படுத்திக் கண்காணிப்புக் குழுவினருடனான தொடர்புகளைக் கூட தடுக்க முயல்கின்றன.

இணைத்தலைமை நாடுகளைப் பொறுத்தவரையில் அதில் அங்கம்பெற்றுள்ள நாடுகளை நாம் சமாதானத்தின் காவலர்களாகவும் சமாதானத்தின் ஊக்குவிப்பாளர்களாகவுமே கருதினோம்.

ஆனால் இணைத்தலைமை நாடுகள் போர் தொடங்கியவுடன் அதுகுறித்து எதுவுமே பேசாது மௌனத்தை கடைப்பிடித்தமையானது எமக்கும் எமது மக்களுக்கும் ஏமாற்றத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த மௌனப் போக்கிற்குப் பதிலாக இந்த நாடுகள் சமாதான முயற்சிகளுக்கு மாறாக யுத்த நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் நோக்கோடு அதற்கான தயார்படுத்தல்களில் அக்கறை காட்டிய அரசை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை.

அத்தோடு இந்த இணைத்தலைமை நாடுகளில் அங்கம் பெற்றுள்ள சில நாடுகள் அரசுக்கு இராணு உதவிகளை வழங்கி போருக்கு ஊக்கப்படுத்தி தமது பொறுப்பின் நடுநிலைத் தன்மையில் சந்தேகத்தை உருவாக்கியமையானது போருக்கும் ஆதரவு சமாதானத்திற்கும் ஆதரவு என்ற ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட வகையில் செயற்படுவதானது; எமக்கு நகை முரண்பாடாக உள்ளது.

கனடா, ஜேர்மனி, நெதர்லாந்து போன்ற நாடுகள் இலங்கைக்கான நிதியுதவியை ஜனவரியுடன் முடக்கப்போவதாக வெளிவந்த செய்திகள் குறித்து என்ன கூற விரும்புகிறீர்கள்?

செய்திகளை நாமும் ஊடகங்கள் மூலமாக அறிகிறோம். இந்த முயற்சியைத் தடுத்தி ஏனைய நாடுகளும் இத்தகைய தடை முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறோம். அதற்கு இந்த செய்திகள் வெறும் சிந்தனையோடு நின்று விடாமல் செயலுரு பெறவேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

ஏனெனில் அரசானது தமிழ் மக்களுக்கு எதிரான போரை தனது சொந்த பொருளாதாரத்தினூடாக நடத்தவில்லை. மாறாக இரவல் பொருளாதாரத்தில்தான் அரசு தமிழ் மக்களுக்கு எதிரான போரை முன்கொண்டு செல்கிறது.

இந்த இரவல் பொருளாதாரப் பலத்தை அரசுக்கு சர்வதேச நாடுகள் வழங்குவது எமக்கு கவலையளிக்கிறது. கடனாகவும், மானியமாகவும் இந்த நாடுகள் இலங்கை அரசுக்கு வழங்கும் உதவிகளை அரசு தனது போர் இயந்திரத்தை புதுப்பிக்கவும் மெருகூட்டவும் பயன்படுத்துகிறது. போருக்கு முண்டுகொடுக்கும் இத்தகைய உதவிகள் காரணமாகவே அரசு தமிழர் பிரச்சினையை தீர்க்கும் நடவடிக்கையில் கடும் போக்கை கடைப்பிடிப்பதற்கு காரணமாக இருக்கிறது.

இந்த உண்மையை இந்த மேற்குலக நாடுகள் புரிந்துகொண்டு அரசுக்கு வழங்கிவரும் உதவிகளை நிறுத்துவார்களேயானால் அரசினால் போர் செய்ய முடியாத நிலை ஏற்படும். இதன் காரணமாக தமிழ் மக்கள் மீது அரசு தொடுத்துள்ள போரை நிறுத்த முடியும். இதன் மூலம் அரசு தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு இராணுவ வழியில் தீர்வு காணும் எண்ணத்தை இல்லாமல் செய்ய முடியும்.

இத்தகையதொரு புறச்சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை புலிகள் இயக்கம் நீண்டகாலமாக அனைத்துலக சமூகத்திற்கு கோரிக்கையாக விடுத்து வருகிறது. இதனை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

அண்மையில் அரசு இழைத்து வரும் கட்டுக்கடங்காத மனித உரிமை மீறல்களை சுட்டிக்காட்டி இத்தகைய நிதி முடக்கங்களை சில நாடுகள் மேற் கொள்ள முயல்வதானது நாம் எதிர்பார்க்கின்ற அந்த புறச்சூழல் ஏற்படுத்தும் என நம்புகிறோம் என்றார் அவர். (ச-5)

விற்பனைக்கு

புதிய அசிபர் மோட்டார் சைக்கிள், மேசை, குளிர் சாதனப்பெட்டி, ஆட்டுக்கடா என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:-
இல.21,கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.

(சி-600)

PC PARK (PVT) LTD

the path to computer paradigm

633, K.K.s Road, Jaffna. Tel :021 222 9581, Fax : 021 222 9581

X-MAS Non Stop தொடர்ந்து...

Processors
3.0 GHz Intel Pentium HT (03 Year) - Rs.9,000.00
3.0 GHz Intel Pentium Dual Core (03 Year) - Rs.11,250.00

RAM Types
512MB DDR-2 PC-667 Kingston (03 Year) - Rs.2,200.00
1GB DDR-2 PC-667 Kingston (03 Year) - Rs.3,300.00
512MB DDR-I Hynics (01 Year) - Rs.3,500.00

Hard disk Drives
80GB SATA Maxtor (03 Year) - Rs. 6,250.00
160GB SATA Hitachi (03 Year) - Rs.7,000.00
80GB IDE Samsung (01 Year) - Rs.6,200.00

Motherboards
ASUS P5P800S (03 Year) - Rs.7,500.00
ASUS P5S-MX SE (03 Year) - Rs.6,700.00
ASUS P5GC –MX (03 Year) - Rs.7,700.00

Optical Drives
DVD Writer ASUS 18X Light scribe (01 Year) - Rs.4,750.00
DVD Writer Samsung 18X Dual Layer (01 Year) - Rs.4,500
DVD Rom ASUS 16X (01 Year) - Rs.3,250.00
CD Rom HP 52X Black (01 Year) - Rs.2,000.00
Combo Drive Samsung Black (03 Year) - Rs.3,500.00

Flash Drives
1GB Flash Drive Kingston (05 Year) -Rs.1,700.00
2GB Flash Drive Kingston (05 Year)- Rs.2,700.00
4GB Flash Drive Kingston (05 Year) - Rs.4,700.00
MP3 Player 512MB Rs.5,800.00

VGA Cards
128MB ASUS AX300SE PCI Express (03 Year) - Rs.4,700.00
128MB ASUS N6200 AGP (03 Year) - Rs.5,000.00

TV CARDS
TV Combo Gadmai (01 Year) - Rs. 3,500.00
TV Card MSI TV@NYWHERE (01 Year) - Rs. 4,000.00

Key Board & Mouse
Keyboard PS2 Black - Rs.450.00
Mouse Genius Optical PS2 Black - Rs.500.00
Wireless Optical Mouse -Battery free - Rs.1900.00

HP Laser Jet Toner
HP Toner 12A Rs.8,250.00
HP Toner 15A Rs.8,500.00
HP Toner 13A Rs.7,800.00

and

Sound Card Creative 501 Blaster (01 Year) - Rs.2,750.00
ATX Casing P4 450W Black (01 Year) - Rs.4,500.00
Modem Internal 56kb Fax (01 Year)- Rs. 1,200.00
EPSON Ribbon - Rs.580.00

December 17 முதல் December 21 வரை மட்டுமே.

Join SKY LINE INSTITUTE today
& Get a recognized
UK Diploma from a London Campus

Quantity Surveying
Leading to BSc (Hons) - UK

- Building Designing
- Management
- Civil Engineering
- Construction Engineering

Those Eligible to Register

O/L Students	Foundation Level - 3 Months
A/L Students	Diploma Level - 6 Months
NDT/NCT/Draftsmen	Advanced Diploma Level - 6 Months

After completion of the Advanced Diploma you can complete your final year Degree Program & Experience the facilities offered at
CITY CAMPUS - LONDON

You will also be prepared to apply for employment in any International Organisation

SKY LINE INSTITUTE
No. 13, Francis Road, Wellawatte, Colombo 06.
(Between Station Road and Wellawatte Mosque
Tel: 0112 553475 Hotline: 077 3347332

60 DAY'S SPOKEN ENGLISH Course
இலவச தபால் மூல ஆங்கில பாடநெறி

BASIC/SPOKEN ENGLISH
இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி English Language மீல் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

அடிப்படையில் இருந்தே தமிழ் வீளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.

DIPLOMA IN ENGLISH
தமிழில் ஓர் அளவு வீளக்கம் கொடுக்கப்பட்டிருக்கும். ஆங்கிலம் தெரிந்த மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த பாடநெறியாகும்.

60 நாட்களுக்குள் அங்கீகரீக்கப்பட்ட Diploma சான்றிதழ்

FREE FREE
இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
* இலவச 30 days Easy Way English Book



இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்போர், இல்லத்தரிசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

MALAYSIA வில் பட்டப்படிப்பு!

சான்றிதழ்களுடன் வரவும்



ஒவ்வொன்றும் US$ 5,000* வரை பெறுமதியான RMIT UNIVERSITY
Study Grant Award
on December 20th & 21st

- தகமைக்குயேற்ப மாணவர்கள் எதிர்ப்பார்க்கும் கற்கை நெறிகளுக்கு பல்கலைக்கழக அனுமதியும், STUDENTS VISA வும் வழங்கப்படும்!
- எங்கள் ஆலோசகர்கள் பிரயாண ஏற்பாடுகள், HOSTEL வசதிகள் செய்து மாணவர்களை அழைத்துச்செல்வர்!

√ பகுதிநேர தொழில் வாய்ப்புகள்! ...குறைந்த தகமை O/L
√ நியாயமான கட்டணங்கள்! தவணைமுறையில்!
√ IELTS or Sponsor அவசியமில்லை!

MAHSA COLLEGE
College of Medical and Allied Health Sciences
மருத்துவ கற்கைகளுக்கு மகோன்னத பல்கலை நிறுவனம்!

KLIUC கோலாலம்பூர் பொறியியல் பல்கலைகழகம்
KUALA LUMPUR INFRASTRUCTURE UNIVERSITY COLLEGE
கலைமாணி கற்கைகளுடன் பொறியியல் டிப்ளோ கற்கைகளுக்கு மிகுபிரபலமான நிறுவனம்

TAYLOR'S UNIVERSITY COLLEGE
French Diploma & Degree for Hotel Manegement

Hospitality Tourism & Culinery Arts
KDU COLLEGE
முதுகலைமாணி பட்டங்கள் அனைத்தும்

Nilai International University College
MALAYSIA
16 கற்கைகளுக்கு ஒரே கழகம் மட்டுமல்ல,
New Aircraft Maintenance Engineering கற்கையும்

UCSI
A University par excellence
Canadian Transfer to Manitoba University
14 கற்கைகளுக்கு புகழ்பூத்த நிறுவனம்

SEGi COLLEGE
Study with the Largest Education Group in Malaysia

BINARY UNIVERSITY COLLEGE
A SPECIALIST UNIVERSITY FOR BUSINESS, IT & MANAGEMENT

- ENGINEERING
- BUSINESS
- IT & MULTIMEDIA

SWINBURNE UNIVERSITY OF TECHNOLOGY SARAWAK CAMPUS
முதுகலைமாணி பட்டங்கள் அனைத்தும்

International Degree Pathway to universities in
USA, UK, Canada, Australia and New Zealand

MILLENNIUM CONCEPTS PTE LTD.,
225-3/2, Galle Road, Colombo-4. Tel : 2552765
(Adjoining Visaka Road, Bambalapitiya.)
email : info@mclearninghub.net www.mclearninghub.net
* நிபந்தனைகள் உண்டு

இலங்கையில் விபரங்களுக்கு:
0773 - 40 50 60
கனடாவில் விபரங்களுக்கு:
416-970-3549
Only during working hours or send a sms
அவுஸ்திரேலியாவில் விபரங்களுக்கு:
040 2684 429
Only during working hours or send a sms

என் சோதிடம்

(எண் 5இன் சென்றவார தொடர்ச்சி...)

ஆகையால் தன் முன்னேற்றம் சதா தன்னைச் சூழ்ந்திருக்கிறார்வர்களின் தாமதக் குணத்தால் அல்லது மெதுவான இயல்பால் (Slowness) பாதிக்கப்படுவதாக கூறுவர். இவர்களில் அதிக வேகமுடையவர்களின் கருத்துக்களை பல சமயங்களில் இவர்களது வாழ்நாளுக்குப் பிறகே உலகோர் அறிந்திருக்கின்றனர்.

மிக எளிதில் குழந்தைகள் போல எவரிடமும் சுலபமாக பழகிவிடுவார்கள் மனதில் தோன்றுவதை சுலபமாக வெளியிட்டு விடுவார்கள். ஒன்றையும் மறைக்கத் தெரியாது சுற்றியிருப்போர் இவர்களது காதல் விவகாரங்களைக் கூட சுலபமாக அறிவிந்து விடுவர்.

எதையும் மிகச் சுலபமாக சாதித்துவிடலாம் என்று உண்மையாக நம்புவார்கள். ஆகையால் எவ்வளவு பெரிய காரியமாக இருந்தாலும் சிறிதும் பயமோ, தயக்கமோ இன்றி துணிந்து இறங்கிவிடுவார்கள் நிச்சயம் இல்லாத சூதாட்டம் போன்ற தொழில்களிலும் காரியங்களிலும் கூட வெற்றி நிச்சயம் என்று கூறிக் கொண்டு இறங்கிவிடுவார்கள்.

இவர்கள் இப்படி இல்லாதிருப்பின் நாம் வாழ்க்கையில் எவ்விதமான முன்னேற்றத்தையும் அடைந் திருக்கமாட்டோம். பிறர் செய்ய முடியாததைத் தான் செய்ய வேண்டும் என்பதே இவர்களைத்தூண்டும் அவா. பழமையை வெறுப்பர். புதுமையை நோக்கி விரைவர் புதுமையாக கண்டுபிடிக்கப்படும் பொருட்கள் எல்லாம் நன்மைக்கே என்று நம்புவர்.

மற்றவர்களைப்போலத்தானும் இருக்கலாகாதென எண்ணுவார்கள். நாகரிக மனிதர் அறிவாளிகள் பெரிய கருத்துக்களையும் சமூக மாறுதல்களையும் உலகினரிடை புகுத்துவர். இவ் எண்ணின் சக்தி குறைந்தோர் புதுப்புதுமாதிரியான உடைகள் நகைகள் அணிந்து நாகரிகத்தை பரப்புவார்கள். மேன்மையானவர்கள் எல்லோராலும் போற்றப்பட்டு மேலான காரியங்களைச் செய்த வண்ணம் இருப்பர். கீழ்த்தரமானவர்கள் பிறரை எழிதில் வஞ்சித்தே சிறிதும் பயமின்றி வாழ்வர். அவர்கள் அஞ்சாது பொய் பேசியும் மற்றவர்களை நம்பச் செய்து ஏமாற்றியுமே வாழ்நாளைக் கழிக்கின்றனர். பிரசித்தமான மோசடிகள் நடக்கும் இடங்களில் இவர் பங்காளியாக இருப்பது நிச்சயம்.

இவ்எண்ணிக்கையுடையோர் தீயவராக இருத்தல் விரும்பத்தக்கது அல்ல என்கிற காரணத்தால் மேன்மையான குணங்களைப் பழகி அடைவதை முன்னிட்டு இத்துடன் அவர்கள் தீய சுபாவங்களை விபரிக்காமல் விடுகிறேன். திட்டமான அதிர்ஷ்டசாலிகளான இவர்கள் மேன்மையான வாழ்க்கையை நடத்தி பொருளும் புழுமடைந்து இருப்பதே யாவரும் விரும்புவதாகும்.

சிறுவயதிலிருந்தே யாருடன் பழகினாலும் அவர்களது குணங்களையும் பழக்கங்களையும் சீக்கிரம்கிரகித்துக்கொள்வார். ஆகையால் பெற்றோர் இவ் எண்ணின் ஆதிக்கத்தில் பிறக்கும் குழந்தைகளை மேன்மையான குறிக்கோள் உடையவர்களது உதாரணங்களையே போதித்து நல்ல சக வாசத்திலேயே வளர்க்க வேண்டியது மிக்க அவசியம். இன்று விரும்புகிற விளையாட்டுச் சாமான் நாளைய தினம் பிடிக்காமல் போய்வடும் சதா மாறுதலை விரும்பும் மனமுடையை குழந்தைகள் வயது ஆனாலும் இக்குணம் மாறுவதாக் காணோம். மாறுதல் -மாறுதல் இடம்மாறுதல் -உத்தியோக மாறுதல்- சூழ்நிலை மாறுதல் இவைகளுக்காக பாடுபடுவர். வெகு சிரமப்பட்டு ஒரு பதவியை அடைவர். உடனே அது சப்பென்றாகி விடும். வேறு எதற்காகவாவது முயற்சியை ஆரம்பிப்பர்.

சதா மாறும் காட்சிகளை காணவிரும்பிப் பிரயாணத்தை ஏற்பர். ஆனாலும் ரம்மியமான இடங்களிலும் நீடித்திருக்க பிரியம் ஏற்படாது. எதையாவது புதிது புதிதாகப் பார்த்துக் கொண்டும் செய்து கொண்டும் இருக்க விரும்புவார்கள். இன்ன காரியம் தான் அடுத்த படியாக செய்யப் போகிறார்கள் என்பது இவர்களுக்கே தெரியாது.

ஒன்று நிச்சயம்-இன்று செய்வதை நாளை செய்ய விரும்பமிருக்காது. இவர்களை வாழ்க்கைத் துணைவராக அடைபவர்கள் இக்குணங்களை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

கவர்ச்சிகரமான ஆடை அணிவதாலும், உணவு மாறுதல்களாலும் வெகு சீக்கிரத்தில் இவர்களை கவர்ந்துவிடலாம். இவர்களது குணங்களை அறிந்துகொண்டு இவர்களுக்கு இல்லாத குணாதியங்கள் இருப்பதாக புகழ்ந்தால்கூட உண்மையென நம்பிவிடுவார்கள்.

பண்டிட் சைதுராமன்

உதவி செய்ய பின் வாங்காதவர்களால் இவர் களைக்கொண்டு சுலபமாக எக்காரியத்தையும் சாதித்துக்கொள்ளலாம் ஆசாபாசங்கள் மாறிக்கொண்டே இருப்பதால் இவர்கள் சாமர்த்தியமாக நடந்துகொள்ளாவிடில் பிறர் இவர்களை சந்தேகிக்க நேரிடும். வாழ்க்கையில் நேரிடும் தோல்விகளும் துக்கங்களும் இவர்களைச் சிறிது நேரமே பாதிக்கும். சிறிது நேரத்திற்கெல்லாம் மேற்கொண்டு நடக்க வேண்டிய விஷயங்களை கவனிக்க ஆரம்பித்து விடுவர்.

இதற்குக் காரணம் இவர்களது மனோவேகமும் மாறுதல்களைக்கண்டு அஞ்சாத தன்மை யுமே ஆகும்.

எப்பொழுதும் உற்சாகமாகவே காணப்படும் இவர்கள் தோல்வியால் மனம் வருந்தார். உடனே அதற்கு தகுந்தாற் போல் முயற்சி திட்டத்தை மாற்றி அமைத்து வேலை தொடங்

குவார். இவர்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவேண்டும். தோல்விகள் இவர்களுக்குக் கிடையா. தோல்விபோல் தோன்றுபவை பின்னர் நன்மைக்காக ஏற்பட மாறுதலே என்பது விளங்கி விடும்.

இவர்களது அறிவு உணர்ச்சி தூண்டுதலாலேயே இயங்குவதால் என்ன செய்ய வேண்டுமென்று மனத் தூண்டுதல் உண்டாகிறதோ அதைத் துணிந்து செய்ய வேண்டும் பிறருக்குச் சரியென்று தோன்றாத விஷயமானாலும் அதைப்பற்றி லக்ஷ்யம் செய்யாமல் தோன்றுகிறபடி செய்யவேண்டும் உலகாயத அறிவு (Universal intelligence) என்று கூறப்படுகிறது. ஈஸ்வர சித்தம் இவர்களது பக்தியை ஆட்சி புரிகிறது. ஆகையால் ஏன் என்று கேட்காமால் புத்தியில் தோன்றுகிறபடி இவர்கள் செய்தால் பின்னர் ஏன் என்பது தானே விளங்கும். புத்தியின் தூண்டுதலின்படி நடந்து கொள்ளவதால் எவ்வளவு பெரிய ஆபத்து சூழ்ந்தாலும் அதிலிருந்து தப்பிவிடுவர். எனக்கு ஒரு முக்கிய நண்பர் இருக்கிறார் அவருடைய வாழ்க்கையே அதிசயமான ஆபத்துக்கள் நிறைந்தது. (26ஆம் திகதி பிறந்தவர் கூட்டு எண் 5) நிச்சயமான மரண விபத்திலிருந்து இவர் சுமார் 70 தடவைகள் கடைசி நிமிஷத்தில் தப்பியிருக்கிறார். பல அயல் நாடுகளில் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்தவர். தொடர்ந்து ஒரு மாதங்கூட ஒரு தேசத்தில் இருக்கமாட்டார். பெருத்த கோடீஸ்வரராக இருந்ததும். (தொடரும்)

இலவச மருத்துவமுகாம்

தீவக லயன்ஸ் கழகத்தினால் இன்று மு.ப 9.00 மணியளவில் இலவச மருத்துவ முகாம்கள் யாழ்/ சரவணை சின்னமடு றோ.க. த.க பாடசாலையிலும் யாழ்/ நாரந்தனை றோ. க. த.க பாடசாலையிலும் நடைபெறவுள்ளன.

இங்கு நீரிழிவு,சருமநோய்,இரத்த அழுத்தம்,டெங்கு,சிக்குன்குனியா போன்றவற்றிற்கான விழிப்புக் கருத்தரங்கும், பரிசோதனைகளும், பார்வைக் குறைபாடு, குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியோர்களுக்கான பரிசோதனைகளும் யாழ்/ போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய நிபுணர்களாலும் தாதிமார்களாலும் நடாத்தப்படவுள்ளது. மேலும் தலைமைத்துவப் பயிற்சி, மலேரியா தடுப்பு,மரம் நடுகை, சத்துணவு, கண்ணாடி வழங்கல் போன்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.இதில் சகல மக்களும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு லயன்ஸ் கழகத் தலைவர் ஐ.கோ.சந்திரசேகரன் ஜே.பி. அறியத் தருகின்றார்.இம் மருத்துவமுகாமுக்கு யாழ்ப்பாணம் சாரங்கா நகைமாட உரிமையாளர் லயன் ஆர்.பி.சிவபாஸ்கரன் அனுசரணை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார். (அ)

யாழ் -பறங்கியாளர் சங்கம் மீண்டும் உதயம்

யாழ்.பிரதான வீதி (தர்மலிங்கம் டாக்டர் வீதி)யிலுள்ள பறங்கியாளர் சங்கம் மீண்டும் இயங்கவுள்ளதாக தலைவர் திருமதி வின்சன் தெரிவித்தார். நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் கடந்த இரண்டு ஆண்டுகள் இச்சங்கம் இயங்காதிருந்தமை குறிப்பிடத் தக்கது. (அ-72)

இலங்கை நிர்வாக சேவை தரம் I வடமாகாணத்தில் மூவருக்கு பதவிஉயர்வு

இலங்கை நிர்வாக சேவை தரம்Iக்கு 23 அதிகாரிகள் பதவியுயர்வு பெற்றுள்ளதாக அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை நிர்வாக சேவை தரம் II அதிகாரிகளிலிருந்து இந்த 23 பேரும் தரம் Iக்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளதாக அமைச்சின் பணிப்பாளர் வி.பி.பி.எஸ். அபேகுணரத்ன அறிவித்துள்ளார்.

இப் பதவியுயர்வு 01.7.2007 முதல் செயற்படும் படியாக வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சை ஓரிரு வாரங்களில் நடத்தப்படும். எஸ்.முரளிதரன் (தெல்லிப்பழை பிரதேச செயலர்), ஏ.சிவபாலசுந்தரம் (வெங்கலச் செட்டிக் குளம்), எஸ்.சத்தியசீலன் (கரவெட்டி பிரதேச செயலர்) ஆகியோரே வடமாகாணத்தில் இவ்வாறு பதவி உயர்வு பெறவுள்ளவர் களாவர். (5,6)

தமிழில் பூசை

இந்து சமயக்குரு சிவத்திரு செ.பரமநாதன் சிவாச்சாரியார் இந்தமாத இறுதியில் தமிழகம் பயணமாகிறார். இவர் தமிழகத்திலுள்ள சிதம்பரம் தில்லை நடராசர் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ தங்கசபாபதி குருக்களிடம் தமிழில் பூசை செய்யும் முறைகளை அறிந்து கொள்வதோடு கிரியை முறைகளையும் கற்றுக்கொள்வார். தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு இந்து ஆலயங்களுக்குச் சென்று அங்குள்ள கோவில்களின் நிர்வாகக் கட்டமைப்புகளையும் அறிந்துகொள்வார். (அ)

பிறந்தநாள் அறக்கொடை விழா-2008

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஜே.பி. அவர்களின் 83ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா -2008 இம் மாதம் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மார்கழி மிருகசீரிடத்தோடு ஆரம்பமாகி ஜனவரி 7ஆம் திகதி திங்கட்கிழமை வரை விரிவடைகின்றன.பிறந்த திகதி நிகழ்வுகள் ஜனவரி 7ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 12 மணிவரை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான யாத்திரீகர் விடுதி மண்ட பத்தில் நடைபெறும்.

நிகழ்வில் வலிகாம வலய பாடசாலைகளில் கல்வி பயிலும் திறமையிலும் வறுமையில் மிகுந்த தெரிவுசெய்யப்பட்ட 125 மாணவர்களுக்கு தலா ரூபா2000/- வீதமும், தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு ரூபா 50,000வும் யாழ். போதனா வைத்தியசாலை இருதய நோய்ப் பிரிவுக்கு150,000 ரூபாவும் வழங்கப்படும்.(அ-6)

செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அடுத்த வருடம் தரம் 7, தரம் 11 ஆகிய வகுப்புகளில் தமிழ்மொழி இலக்கியமும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்தச் செயலமர்வுகள் எதிர்வரும் 17,18 ஆம் திகதிகளில் சாவகச்சேரி டச்சுவீதி திருக்கணித மண்டபத்தில் நடைபெறும்.

நேற்றும், இன்றும் நடைபெற இருந்த இச் செயலமர்வுகளே திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திரு மதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.(அ-7)

இராசிபலன்

16.12.2007
(கார்த்திகை 30, ஞாயிற்றுக்கிழமை)
சப்தமி பின்னிரவு 12.44 மணிவரை
சதயம் பிற்பகல் 05.12 மணிவரை
இராகுகாலம் 04.52-06.22 மணிவரை
சுபநேரம் 09.22-10.52 மணிவரை

மேடம்	நண்பர்கள் சந்திப்பு, உற்சாகம், காரிய அனுகூலம், பொருள்சேர்க்கை.
இடபம்	அதிகபிரயாசை, தெய்வ சிந்தை, சுப நிகழ்ச்சி, விருந்துபசாரம்.
மிதுனம்	அச்சமான நிலை, கட்டுப்பாடு, அதிக செலவு, முயற்சி தாமதம்.
கடகம்	காரிய தடங்கல், வாகன பயம், வீண் பகை, ஆரோக்கியக் குறைவு.
சிங்கம்	குடும்ப மகிழ்ச்சி, நல்ல வரவேற்பு, முயற்சி கைகூடும், பொருள்சேர்க்கை.
கன்னி	நோய் குணமடைதல், சத்துருஜெயம், காரிய நன்மை, சகோதரர் உதவி.
துலாம்	புத்திரரால் கவலை, தொழில் சிந்தை, மரியாதைக் குறைவு, உடல்நலக்குறைவு.
விருச்சிகம்	புதிய விடயம், மாதாசுகம், அதிக பிரயாசை, உஷ்ணநிலை.
தனுசு	கூட்டுமுயற்சி, இனிய அனுபவம், அன்னியர் சந்திப்பு, வாக்குவன்மை.
மகரம்	கோப்படுதல், பணவிரயம், காரிய தாமதம், சயன சுகக்குறைவு.
கும்பம்	தேகநலன், பெரியோர் ஆதரவு, பொருள் சேரல், போசன சுகம்.
மீனம்	சயனசுகக்குறைவு, திடீர் பயணம், உறவினர் சந்திப்பு, பொருள் விரயம்.

வளவன்

யாழ்.கல்வி வலயம் ஒழுங்கு செய்த உலக மாற்று வலுவுள்ளோர் தின விழாவில் யாழ்.ஆவரங்கால் மகாஜன வித்தியாலய மாணவியின் கலைநிகழ்வினையும், விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த சமூக தொழில்வழி சிகிச்சையாளர் இ.கணேசலிங்கம், பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஜோ.ரவீந்திரன், கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் சிறுவர் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் அ.அஜந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், பிரதம விருந்தினரான கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

சினிமா துளிகள்

+தாடியுடன் கமல்ஹாசன்!

'தசாவதாரம்' படம் முடிவடைந்ததைத் தொடர்ந்து கமல் ஹாசன் அடுத்து 'மர்மயோகி'க்காக தயாராகி வருகிறார். அந்தப் படத்துக்காக அவர் தாடி வளர்க்க ஆரம்பித்திருக்கிறார். 'மர்மயோகி' படத்தை அவரே டைரக்டு செய்து, தயாரிக்கிறார்!

+மலேசியாவில், விஜய்- திரிஷா!

விஜய்-திரிஷா ஜோடியாக நடித்து வரும் 'குருவி' படத்தின் படப்பிடிப்பு அடுத்த வாரம் முதல் மலேசியாவில் நடைபெற இருக்கிறது. ஜனவரி வரை மலேசியாவில் படப்பிடிப்பு தொடர்கிறது.

எனவே 'குருவி' படப்பிடிப்பு குழுவினருக்கு புத்தாண்டு கொண்டாட்டம், மலேசியாவில் தான்!

+பிடித்த வேடங்களில் மட்டும்...

கதாநாயகனுக்கு இணையான குணச்சித்திர பாத்திரத்தில் நடிக்கும் நடிகர்கள் தமிழில் குறைவாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட வேடங்கள் அனைத்தும் இப்போது பிரபுவை தேடிப் போகின்றன. தினமும் ஐந்தாறு டைரக்டர்கள் கதை சொல்ல வருகிறார்கள்.

ஆனால் பிரபு வருகிற படங்களை எல்லாம் ஏற்றுக்கொள்வதில்லை. தனக்கு பிடித்த படங்களில் மட்டுமே நடிக்கிறார்.

+சீனாவில் முதல் தமிழ்ப் படம்!

கவிஞர் பா.விஜய் கதாநாயகனாக நடிக்கும் 'தாய்க்காவியம்' படத்தின் படப்பிடிப்பு சீனாவில் நடைபெறுகிறது. கதாநாயகன் பா.விஜய். டைரக்டர் பாலி ஸ்ரீரங்கம் உட்பட 15பேர் அடங்கிய படப்பிடிப்பு குழுவினர் சீனா போயிருக்கிறார்கள்.

சீனாவில் நடைபெறும் முதல் தமிழ் படப்பிடிப்பு இதுதான்!

+ஆட்டமா...தேரோட்டமா...?

'கேப்டன் பிரபாகரன்' படத்தில் இடம்பெற்ற 'ஆட்டமா... தேரோட்டமா...' என்ற பாடல். ஏ.வெங்கடேஷ் இயக்கி வரும் 'சிங்கக் குட்டி' படத்துக்காக 'ரீமிக்ஸ்' செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பாடல் காட்சியில் விவேக்கும், மாளவிகாவும் ஆடினார்கள்.

இதில் மாளவிகா நடிகையாகவே வருகிறார். அவரிடம் 'டச்அப்' பையனாக வேலை செய்பவராக விவேக் வருகிறார். விவேக் கற்பனையில், இந்தப் பாடல் காட்சி படத்தில் இடம் பெறுகிறது.

+திரைக்கு வராத மர்மம்!

கஸ்தூரிராஜா டைரக்டு செய்து, பிரகாஷ்ராஜ், உதயா நடித்த 'காதல் ஜாதி' படம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் ஆகிறது. என்றாலும் படம் வெளிவரவில்லை.

சிறந்த கதையம்சமும், விருதுக்குரிய அத்தனை அம்சங்களும் நிறைந்த படமாக இருந்தும் 'காதல் ஜாதி' திரைக்கு வராதது, மர்மமாக இருக்கிறது!.

சினிமா செய்திகள்

தமன்னாவின் நடிப்பை பாராட்டிய ஷங்கர்

கேடி படத்தில் அறிமுகமான தமன்னா. அடுத்து வியாபாரி படத்தில் நடித்தார். ராசியில்லாதவர் என்று பலரும் ஒதுக்கித் தள்ளிய தமன்னா.

அடுத்ததாக நடித்த வியாபாரியும் ஓடவில்லை. தற்போது கல் லூரி படத்தில் தகதகக்கும் தங்கப் பதுமையாக வந்து மார்க்கு களை அள்ளிவிட்டார் தமன்னா. படத்தில் தமன்னாவின் நடிப்பை பார்த்த இயக்குநர் ஷங்கர்.

தமன்னாவை அழைத்து பாராட்டினாராம். அவ்வளவு பெரிய இயக்குநரே பாராட்டியதால் மகிழ்ச்சியில் உறைந்து போயிருக்கிறார் தமன்னா. இனி பெரிய வாய்ப்பு கிடைக்க பெரிய வாழ்த்துக்கள்.

காற்றுப்புகாத நெருக்கத்தில் மீராஜாஸ்மின்

நேபாளி படத்துக்காக நடை, உடை பாவனை என்று பரத் தன்னை முற்றிலும் மாற்றிக் கொண்டிருக்கிறார் என்பது பழைய செய்தி. இந்தப் படத்தில் பட்டதாரி இளைஞன், ஜெயிலில் கைதி, நேபாளி என்று மூன்று வேடங்களில் நடிக்க அவருக்கு ஜோடி மீராஜாஸ்மின். தமிழ் சினிமாவில் தலைகாட்டி பல வருடங்கள் உருண்டோடியும் முதன் முறையாக மீராஜாஸ்மின், பரத்துடன் காற்று புகாத அளவிற்கு கட்டியணைத்து கூடேற்றுகிறார். இப்படத்தின் இறுதி படப்பிடிப்பு மும்முரமாக நடந்து வருகிறது. சமீபத்தில் பழைய மத்திய சிறைச்சாலையில் படப்பிடிப்பு நடத்தப்பட்டது என்பது கூடுதல் செய்தி.

சினி விமர்சனம்

பள்ளி படிப்பு முழுதும் ஒன்றாகவே படித்த நண்பர்கள், ஒரே கல்லூரிக்கு போகிறார்கள். இவர்களுடன் தமன்னா. பாட்டி வீட்டுக்கு வந்த இடத்தில் தற்காலிகமாக இந்தக் கல்லூரியில் சேர்ந்தவள். நண்பர்களின் ஆறுதலும் நட்பும் அவளுக்குள் புகுந்துவிட, தனது இலட்சியத்தை உதறிவிட்டு இந்தக் கல்லூரியிலேயே தங்கி விடுகிறாள்.

தமன்னாவுக்கும் அகிலுக்கும் காதல் முளைக்கிறது. நண்பர்கள் தங்களை தனிமைப்படுத்தி விடக்கூடாது என்பதற்காக காதலை முடிச்சுப்போட்டு வைக்கின்றனர். சுற்றுலா சென்ற இடத்தில் தோழியிடம் காதலை செல்கிறாள் தமன்னா. பிறகு நடப்பது நெஞ்சை உறைய வைக்கும் கிளைமாக்ஸ்.

மூன்று மாணவிகளுக்கு நினைவஞ்சலி செலுத்த, அவர்கள் உயிர்விட்ட இடத்தை மாணவ, மாணவிகள் சுத்தப்படுத்தும் காட்சியுடன் ஆரம்பமாகிறது படம். சில வருடங்களுக்கு முன் என்று பிளாஷ்பேக் விரிய, கல கல கல்லூரி வாழ்க்கை கண் முன் நடமாடுகிறது.

இருபாலாரும் சேர்ந்து படிப்பவர்கள் கடைசிவரை நண்பர்களாக நீடிக்க முடியாது. அவர்கள் காதலர்களாகி விடுவார்கள் என்ற கருத்தை மையப்படுத்தி கதை பயணிக்கத் தொடங்குகிறது என்று பார்த்தால் கிளைமாக்ஸ் கண்களைக் குளமாக்கி விடுகிறது.

யதார்த்தத்தையும், கல்லூரி நட்பையும் இவ்வளவு நேர்த்தியாகவும், நேர்மையாகவும் எந்தப் படத்திலும் சொல்லியிருக்க முடியாது. ஹீரோயின் தமன்னா தவிர மற்ற எல்லோரும் புது முகங்கள். எல்லோருமே அந்தந்த பாத்திரமாக வாழ்ந்திருக்கிறார்கள்.

அகில், பரணி, அருண்குமார், அலெக்ஸ், பிரகாஷ், ஹேமா, ராஜேஸ்வரி, சாய்லதா, மாயாரெட்டி ஆகியோரின் குடும்பப் பின்னணியும், அவர்களின் வலிகளை, வேதனைகளை, இலட்சியங்களை குழப்பமின்றி சொல்லும் திரைக்கதையும் படத்துக்குப் பெரிய பலம்.

இன்னொரு பலம், சின்னச் சின்ன உணர்வுகளைக் கூட, கண்ணாடி போலப் பிரதிபலிக்கும் தமன்னா. அகிலைக் காதலிப்பதாக ஹேமாவிடம் சொல்லி அழும்போது, அட என்று ஆச்சரியப்படுத்துகிறார். இன்னொருவர் ஹேமா. இப்படி யொரு தோழி நமக்குக் கிடைக்கமாட்டாரா என்று ஏங்க வைக்கிறார்.

விளையாட்டு வீரனாக வெற்றிபெற வேண்டும் என்ற இலட்சியத்தில் மூழ்கிய அகில், தமன்னாவுடன் நட்பு ஏற்பட்ட பின், படிப்படியாக அவரைக் காதலிக்கத் தொடங்குகிறார். இதை ஹேமா எதிர்க்கிறார்.

'படிக்க வந்த இடத்தில் காதல் எதற்கு?' என்று அவர் கேட்பது, இளம் சமுதாயத்துக்கு விடுக்கப்பட்ட ஆக்ரோஷக் கேள்வி. நிஜத்தில் வகுப்பறையில் என்னென்ன நடக்குமோ, அதை எங்கோ மறைந்திருந்து படம் பிடித்திருப்பதை போல் தெரிகிறது. ஒவ்வொரு காட்சியும் யதார்த்தம். குறிப்பாக, இரு மாணவர்கள் ஒரே மாதிரி பார்ப்பதும், பேசுவதும் வயிற்றைப் பதம் பார்க்கும் காமெடி.

செழியனின் கேமரா, தத்ரூபமாகப் படம் பிடித்திருக்கிறது. ஜோஷ்வா ஸ்ரீதரின் பின்னணி இசையும், முத்துக்குமாரின் பாடல் வரிகளும் பட்டிமன்றம் நடத்துகின்றன. கிளைமாக்ஸ், யாரும் எதிர்பாராதது. சில அரசியல்வாதிகளின் அட்டூழியங்களுக்கு அநியாயமாகப் பலியாகும் மாணவிகளின் மரண ஓலம் நெஞ்சைப் பதற வைக்கிறது.

என்றாலும், அந்த பஸ் எரிப்பு சம்பவம் இன்னும் அழுத்தமாக இருந்திருக்கலாம். தமன்னா இறப்பது கூட சரியாகப் பதிவு செய்யப்படவில்லை. நினைவஞ்சலிக்கு வைக்கப்பட்ட போட்டோவைப் பார்த்துதான், தமன்னாவும் இறந்துவிட்டாரா என்று கேட்கத் தோன்றுகிறது.

வன்முறை, வெட்டுக்குத்து, அடிதடி, இல்லாமல் படம் கொடுக்க முடியுமா என்று கேட்பவர்களுக்கு இப்படம் ஒரு நல்ல உதாரணம்.

'காதல்' கொடுத்த அதிர்ச்சியையும் தாக்கத்தையும் கொடுக்கவில்லையென்றாலும் நினைவுகளை உசுப்பிவிடும் சினிமா சாயம் பூசாத 'கல்லூரி' வரவேற்கப்பட வேண்டிய படம்.

கல்லூரி -ரகளை-காதல்-சோகம்!

மிருகத்துக்கு வந்த அடுத்த சிக்கல்

டைரக்டர் சாமியின் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் மிருகம். இந்தப் படத்தின் படப்பிடிப்பில் சாமி தன்னை தொந்தரவு செய்ததாகவும், தன்னை அடித்ததாகவும் நாயகி பத்மப்ரியா அதிரடி புகார் கூறினார். இது சினிமா உலகையே பரபரப்புக்குள்ளாக்கியது. பத்மப்ரியாவிடம் சாமி மன்னிப்பு கேட்ட பிறகு மீண்டும் படப்பிடிப்பு துவங்கியது.

தற்போது வெளியிடத் தயாராக இருக்கும் மிருகத்துக்கு அடுத்த சிக்கல் வந்துள்ளது.

படத்தில் மாட்டை கொடுமைப்படுத்தி பல காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இது மிருக வதை சட்டத்திற்கு எதிரானது. எனவே படத்தை தடை செய்ய வேண்டும் என்று 'ப்ளூ கிராஸ்' அமைப்பு கோரியுள்ளதாம்.

சத்யராஜின் புதுவேடம்

தான் ஒரு சிறந்தநடிகன்என்பதை அவ்வப்போது நிரூபித்து வருபவர் சத்யராஜ். அவர் நடித்து வெளியான பெரியார் படம் அனைவரையும்சுவர்ந்து இழுத்தது. இதனால் அவரை சினிமா உலகமே வெகுவாகப்பாராட்டியது.

இதையடுத்து வெளியாகியுள்ள ஒன்பது ரூபாய் நோட்டிலும் சத்யராஜின் நடிப்பு மிளிர்கிறது. அடுத்ததாக எம்.ஜி.ஆர். வேடத்தில் நடிக்கவிருக்கிறார். இந்நிலையில் விடுதலைப் புலிகள் குறித்த புதிய படம் ஒன்றில் அன்றான் பாலசிங்கம் வேடத்தை ஏற்று சத்யராஜ் நடிக்க இருக்கிறார். இதற்கான அறிவிப்பு விரைவில் வெளிவரும்.

பெங்களூரில் பிறந்தநாள் கொண்டாடிய ரஜினி

சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் ஒவ்வொரு பிறந்த நாளிலும் ரசிகர்கள் சென்னையில் கூடுவதை தவிர்ப் பதற்காக வெளிநாடு சென்று விடுவார்.

ஆனால் இந்த ஆண்டு அவர் சொந்த மாநி லமான கர்நாடகாவுக்கு சென்றிருந் தார். பெங்களூரில் உள்ள வீட்டில் எளிய முறை யில் நடந்த ரஜினியின் 57ஆவது பிறந்த நாள் கொண்டாட்டத்தில் குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய நண்பர்கள் மட்டும் கலந்துகொண்டனர். இதுதவிர அவரது ரசிகர்கள் தமிழகம் முழுவதும் அன்ன தானம், மருத்துவமுகாம் உள்ளிட்ட சேவைகளுடன் சூப்பர் ஸ்டாரின் பிறந்த நாளைக் கொண்டாடினார்கள்.

விஜய்க்காக கதை எழுதுகிறார் தங்கர்



சமீபத்தில் கொடுத்த பேட்டியொன்றில், மாஸ் ஹீரோக்கள் உண்மையான படைப்பாளிகளை ஊக்குவிப்பதில்லை என்று குற்றம்சாட்டியிருந்தார். இதையடுத்து தங்கர் பாணி கிராமத்து களமும், தனது பாணி கமர்ஷியல் அம்சங்களும் நிறைந்த படமாக இருந்தால் கண்டிப்பாக நடிப்பேன் என்று அறிவித்தார். இதனால் மகிழ்ச்சியடைந்த தங்கர்பச்சான் விஜய்க்காக கமர்ஷியல் கிராமத்து பாணி கதையை எழுதத் துவங்கி விட்டாராம். விரைவில் தங்கர்-விஜய் கூட்டணி பற்றிய அறிவிப்பு வெளிவரும் என்கிறது கோலிவுட் பட்சி.

'மிரட்டும் முள்கிரீடம்'

கிரிக்கெற்றில் அணித்தலைவர் பதவி மிகவும் வினோதமானது. சிலருக்கு தேடி வரும். உதாரணமாக சச்சினை சொல்லாம். தலை சிறந்த வீரரான இவருக்கு இப் பதவியை கொடுத்த போது வேண்டாவே வேண்டாம் என்று தலை தெறிக்க ஓடினார்.

மறுபக்கம் பார்த்தால் சிலருக்கு அணித் தலைவர் பதவி கேட்டாலும் கிடைக்காது . ஒரு நாள் போட்டிக்கான அணிக்கு தன்னை

அணித்தலை வராக நியமிப்பார்கள் என்று அனுபவ யுவராஜ் மிகவும் எதிர்பார்த்தார்.

ஆனால் அணித் தலைவர் பதவி இளம் தோனிக்கு தரப்பட்டது. இதேபோல அவுஸ்தி ரேலியா அணியிலும் அதிரடி மாற்றங்கள் அரங் கேறின.

பொண்டிங்குக்கு அடுத்து கில்கிறீஸ் என்ற நிலை தடா லடியாக மாறியது. இருபது - 20 போட்டிக்கு மைக் கேல்கிளார்க் திடீ ரென அணித்தலைவராக நியமிக்கப்பட் டார். பாகிஸ்தான் அணித்தலைவர் பதவிக்கு யூனிஸ்கான் தான் தகுதியானவர் என பலரும் கணித்தனர்.

ஆனால் வாய்ப்பு சொயப் மாலிக்குக்கு தரப் பட்டது. இப்படி அனுபவ வீரர்கள் இருக்கும் போது இளமைக்கு வாய்ப்புத்தருவது சரி தானா என்று பார்ப்போம்.

இந்திய அணியின் அணித்தலைவர், பதவியிலிருந்து டிராவிட் விலகியபோது , அடுத்து யாரை நியமிப்பது என்ற கேள்வி எழுந் தது. இருபது -20 உலகக்கோப்பைத் தொட ருக்கு சற்றும் எதிர்பாராத வகையிலும் அணித் தலைவராக தோனி நியமிக்கப்பட்டார். இந்த நேரத்தில் தனது மகனுக்கு அணித்தலைவர் பதவி கொடுக்காதது பற்றி யுவராஜ் தந்தை யோகராஜ் வெளிப்படையாகவே குற்றம் சாட் டினார்.

25 வயதான யுவராஜ் இதுவரை 195 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். ஆனால் 26 வயதான தோனி 96 போட்டிக ளில் தான் விளையாடியுள்ளார். அனுபவ அடிப் படையில் பார்த்தால் யுவராஜுக்கு தான் வாய்ப் பளித்திருக்கவேண்டும். இதற்கு விளக்கம் அளித்த தேர்வாளர்கள் !யுவராஜ் நிரந்தர மான டெஸ்ட் அணியில் இடம்பெறுவதில்லை. அதே நேரத்தில் டெஸ்ட் ஒரு நாள் போட்டி என இரண்டிலும் தோனி இடம்பெறுகிறார். இள மைக்கு முக்கியத்துவம் அளித்துள்ளோம் என் றனர்.

ஆனால் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ் தொடருக்கு சச்சின் அணித்தலைவர் பத வியை ஏற்க மறுக்க 37 வயதான கும்ளேயை அணித் தலைவராக நியமித்தனர். இள மைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பட்சத் தில் டெஸ்ட் தொடருக்கும் தோனிக்கு அல்லவா வாய்ப்பு அளித்திருக்கவேண்டும்.

இப்படி அணித்தலைவர் பதவி தொடர் பாக இந்திய தேர்வாளர்கள் குழப்பமான முறையை கடைப்பிடித்து வருகின்றனர்.சமீப காலமாக அணி வெற்றி மேல் வெற்றி பெற்று வருவதால் அணித்தலைவர் விடயம் பெரிய எவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

கிளாக் எழுச்சி:- அடுத்த உலக சம்பி யன் ஆவுஸ்திரேலிய அணியிடம் அணித் தலைவர் சர்ச்சை வெடித்துள்ளது நியூசிலாந் திற்கு எதிரான இருபது-20 தொடருக்கு பொண்டிங்கிற்கு ஓய்வு அளிக்கப்பட அணித்தலைவராக மைக்கல் கிளார்க் நியமிக்கப்பட்டார் . இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஏனென்றால் அனுபவ கில்கிறீஸ்டு க்கு தான் வாய்ப்பு தரப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

36 வயதான இவர் நியூசிலாந்து தொடருக்கு முன்பாக 11 இருபது-20 போட்டி களில் 246 ஓட்டங்கள் (24.60 சராசரி) எடுத் துள்ளார். 275 ஒரு நாள் போட்டிகளிலும் விளை யாடியுள்ளார். 26 வயதான கிளார்க் 11 இரு பது.* 20 போட்டிகளில் 77 ஓட்டங்கள் (12.83 சராசரி) மட்டுமே எடுத்துள்ளார்.

கிளார்க்கை பார்க்கிலும் அதிரடியாக விளையாடக்கூடிய கில்கிறீஸ்டை புறக்கணித் தது விடயப்பாக இருந்தது. இளமை அடிப்படை யில் கிளார்க் வாய்ப்பை தட்டிச்சென்றது. சைமண்ட்ஸ் உள்ளிட்ட மூத்த வீரர்கள் மத்தி யிலும் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

இத்தனை காலம் அணியின் நலனுக் காக உழைத்தது எல்லாம் வீணாகிவிட்டதா கப் புலம்புகின்றனர்

யூனிஸ் அசத்தல்:- இன்சமான் ஓய் வின் பிறகு பாகிஸ்தான் அணியிலும் அணித் தலைவர் சர்ச்சை தலைதூக்கியுள்ளது. இப் பதவியை ஏற்குமாறு யூனிஸ்கானிடம் முதலில் கேட்கப்பட்டது. இவர் மறுக்க அனுபவ மில்லாத சொயப் மாலிக் அணித் தலைவராக நியமிக் கப்பட்டார்.

அணியை வழி நடத்திச்செல்லும் துணிச் சல் இவரிடம் சுத்தமாகக்காணப்படவில்லை. விளைவு...?இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரை பாகிஸ்தான் பரிதாபமாக இழந்தது. டில்லி டெஸ்டிலும் கோட்டைவிட்டது. பின்னர் காயம் காரணமாக விலகிக்கொள்ள யூனிஸ் கான் தலைமையில் கொல்கத்தா டெஸ்டை பாகிஸ்தான் சமநிலை செய்து காட்டியது. இதை யடுத்து அனுபவ யூனிஸ்தான் தான் தலைமை பதவிக்கு தகுதியானவர் என்று பலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

கரும் போட்டி:-

இலங்கை அணியில் பத்து நீக் கெ ஜ யி

அத்தப் கப்பட்டு வர்தன அணித் தலை வராக நியமிக் கப்பட்டபோதும் சர்ச்சை எழுந் தது. அப்போது ஜெய சூரியா போன்ற மூத்த வீரர் கள் புறக்கணிக் கப்பட்டனர்.

தென்னாபிரிக்க அணியில் பொலக் காலிஸ் போன்றவர்கள் இருந்தும் இளம் ஸ்மித் அணித்தலைவராக நியமிக்கப்பட்டார்.

இங்கிலாந்து அணியிலும் அணித் தலை வர் பதவிக்கு மைக்கேல் அணித் தலை வராக வோன்கொலிங்வூட் பீட்டர்சன் பிளின்டொரப் மத்தியில் அவ்வப்போது போட்டி காணப்படுகிறது.

சரியான தீர்வு:- தங்களது போர்ம் பாதிக் கப்படும் என பயந்து அணித்தலைவர் பதவி வேண்டாம் என்று சிலர் விலகிக் கொள்கின் றனர்.

சிலர் பழிக்கு அஞ்சி பதவியை துரத்தி எறிந்து விடுகின்றனர். சிலருக்கு பதவி

கிடைத்தாலும் சிக்கல் ஏற்படுகிறது. இப்படி முள்கிரீடமாக கருதப்படும் அணித்தலைவர் பதவி வீரர்களை மட்டுமல்ல ரசிகர்களையும் பாடாய்ப்படுத்தி வருகிறது.

வடடு அமிர்தன்

இதற்கு தீர்வு காண வேண்டிய பொறுப்பு தேர்வாளர்கள் கையில்தான் உள்ளது. சரி யான வீரர்களை சரியான நேரத்தில் அணித் தலைவர் பதவிக்கு நியமிக்கவேண்டும் செய் வார்களா தேர்வாளர்கள்.

பந்தின் நிறம் என்ன?

டெஸ்ட் போட்டியை மின் ஒளியில் நடத்தி னால் எம்மாதிரியான பந்தைப் பயன்படுத்து வார்கள்? டெஸ்ட் போட்டியை பகல் இரவாக நடத்த கிரிக்கெற் அவுஸ்திரேலியா முனைந் துள்ளது.

ஆனால் அது உருப்பெறுவதற்கு முன்ன தாகவே பல் வேறு சிக்கல்களை சந்திக்க வேண்டி யிருக்கும் எனத் தெரிகிறது முதலில் பழமைவாதிகள் இந்த மாற்றத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவிப்பார்கள். இருந்தாலும் கிரிக் கெற்றின் நலன் கருதி அதாவது சரிந்து கொண் டிருக்கும் வருகையை நிலை இம் மாதிரி போட்டிகள் என கிரிக் கிகள் கருது

ரசிகர்கள் மீண்டும் நிறுத்த யான டெஸ் அவசியம் கெற் நிர்வா கின்றனர். இதற்கிடையே அதற்கு பந்துகள் எங்கிருந்துவரும். எப்படி இருக்கும் என கேள்வி எழும்பவும் செய்கிறது.

டெஸ்ட் போட்டிகள் வெள்ளை நிற உடை அணிந்து பாரம்பரியத்துடன் விளையாடப் பட்டு வருகின்றனர். இம் மாதிரி பகல் இர வாக நடத்தப்படும் போது ஆடைகளின் நிறமும் மாறும் அப்போது வழக்கமாக பயன்படுத்தப் பட்டு வரும் சிவப்பு நிற பந்துகளையும் மாற்ற வேண்டியிருக்கும்.

மேலாக ஷேன்.ஹர்பஜனுக்கும்.முரளிக் கும் அங்கு இடமில்லாமல் போய் விடும். கிரிக்கெற் மீது வெறுப்பு தட்டிவிடும் பொது வாக டெஸ்ட் போட்டிகளில் நேரம் ஆக ஆக பந்தின் தன்மை மாறும். அதற்கு ஏற்ப பந்துவீச்சாளர் களும் வாய்ப்பைப்பெறுவர்.

வேகப்பந்து மித வேகப்பந்து, சுழற்பந்து வீச்சாளர்கள் என மாற்றம் வரும். அவையெல் லாம் இந்த புதிய அணுகுமுறையில் இருக் காது. ஒரு வேளை ஒளியில் தெரியக்கூடிய இளம் நிறத்திலான பந்துகளை போட்டிக்கு பயன்படுத்துகிறார்கள் என்றால் ஏற்கனவே உள்ள நிறத்தின் தன்மையை இழக்க நேரிடும்.

இளம் நிறத்திலான பந்துகள் எதைப் பயன்படுத்தினாலும் விரைவிலேயே அழுக் குப் படிந்துவிடும் அப்போது ஒவ்வொரு 35 ஓவர்களுக்கும் பந்துகளை மாற்றுவார்களா? அப்படியானால் கிரிக்கெற் அடிப்படையையே மாற்றவேண்டியிருக்கும்.

பகல் இரவாக டெஸ்ட் போட்டியை நடத்தும் போது பந்து முக்கிய பிரச்சினையாக இருக் கும்.

டெஸ்ட்தான் திறமைக்கு அடையாளம்

இந்திய அணியின் இளம் நட்சத்திரமாக வலம் வந்த யுவராஜ்சிங் தற்போது அணி யின் துணை அணித்தலைவராக அந்தஸ் துக்கு முன்னேறியுள்ளார். பெங்களூர் டெஸ்ட் டில் சதம் அடித்த இவர் அவுஸ்திரேலியத் தொட ரிலும் அசத்தக் காத்திருக்கிறார். இவர் அளித்த ஸ்பெஷல் பேட்டி.

இருபது -20 ஒரு நாள் போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டும் டெஸ்ட் அணியில் இடம் கிடைக்காதது பற்றி எண்ணியதுண்டா?

ஆம் நிச்சயமாக இதே கேள்வியை என் மனதிற்கும் பலமுறை கேட்டுள்ளேன். நான் சர்வ தேச அரங்கில் அறிமுகமாகி 7 வருடங் கள் ஆகியுள்ளன. ஆனால் இதுவரை 20 டெஸ்ட் போட் டிகளில் மட்டுமே பங்கேற்றுள் ளேன். திறமை யான வீரர் என என்னை பலர் புகழும் போதும் சிறந்த டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே பங்கேற்றுள்ளேன். திறமையான வீரர் என என்னை பலர்புகழும்போதும்சிறந்த டெஸ்ட் வீரர் என்ற பெயர் எடுக்க விரும்புகி றேன். மிகச் சிறந்த வீரர்கள் டெஸ்ட் போட்டிகளில் அபா ரமாக செயல்பட்டிருப்பர்.

டெஸ்ட் போட்டிகளில் நீங்கள் நன்றாக துடுப்பாட்டம் செய்ததில்லையே?

ஆம் ஓரளவு உண்மைதான் எனினும் வாய்ப்புகள் கிடைத்தால் மட்டுமே திறமையை வளர்த்துக்கொள்ளமுடியும். ஒருநாள் இருபது-20போட்டிகளில்மட்டுமேபங்கேற்றுநான்சிறந்த வீரர் என கூறுவது ஒப்புக்கொள்ள முடியாது.

மூத்த வீரர்கள் சிறப்பாக ஆடி வருவதால் வாய்ப்புக்கு நீங்கள் காத்திருக்க வேண்டும் என அணித்தலைவர் கும்ளே கூறியது பற்றி?

இது சில சமயம் வருத்தம் அளித்தாலும் உண்மைதான் எனது வாய்ப்புக்காக சில ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் .

அவுஸ்திரேலிய தொடரில் உங்களுக்கு வாய்ப்புக்கிடைக்குமா?

உறுதியாக கூற முடியாது அணி நிர்வா கம் தான் இதுகுறித்து முடிவு செய்யவேண்டும்

உங்களது வளர்ச்சியில் தாயின் பங்கு என்ன?

குழந்தை பருவம் முதலே என்மீது தாய் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். இன்று இந்த அளவுக்கு நான் முன் னேறியிருப்பதற்கு பெற்றோர்கள் தான் முக்கிய

காரணம். இந்திய அணி யில் நிச்சயம் வாய்ப்பு கிடைக்காது என தந்தை பலமுறை கூறியுள்ளார். ஆனால் தாய் எப் போதும் எனக்கு ஆதரவாகவே செயல்படுவார்.

தந்தையின் வார்த்தைகளை தகர்த்து எறிந்தது பற்றி?

17வயதில் இந்திய அணி சார்பில் அறிமு கமான போதுதான் தந்தையின் அறிவுரை கள் எனது நன்மைக்கே என்பதை புரிந்து கொண்டேன் . சிறு வயதில் நண்பர்களுடன் இணைந்து விளையாட என்னை அனுமதிக்க மாட்டார். எப்போதும் தனது பார்வையிலேயே இருக்கும்படி பார்த்துக்கொள்வார்.

இந்திய அணி இருபது -20 உலக கோப்பை வென்றபோது அணி வகுப்பின் போது மழை பெய்ததால் ரசிகர்கள் திரள மாட்டார்கள் என கூறினீர்கள் . ஆனால் வழி நெடுகிலும் உங்களை வரவேற்க அவர்கள் காத்திருந்தது பற்றி?

இந்திய அணி உலக கோப்பை பெற்றுத் தந் தால் என்ன நடக்கும் என்பது பற்றி சிறு வயது முதலே எண்ணிவந்துள்ளேன். மேலும் இதே ஆண்டு 50 ஓவர் உலக கோப்பையில் படு தோல்வியடைந்தோம். இதற்காக ரசிகர்கள் மிகுந்த ஆத்திரமடைந்தனர். இதனால் தான் சந்தேகம் அடைந்தேன்.

இருபது -20 உலக கோப்பை தொடரின் போது முக்கிய வீரர்கள் இல்லாதது தவிர வேறு என்ன மாற்றம் அணியில் நிகழ்ந்தது?

சிறந்த அணியை உருவாக்க நம்பிக்கை உடைய இளம் வீரர்கள் போதும். மேலும் ஒற்று மையுடனும் செயல்படுவது அவசியம்.

இருபது -20 தொடரில் தொடர்ச்சியாக ஆறு சிக்சர்கள் அடிப்பது சாதனை என்பதை உணர்ந்தீர்களா?

ஆம் தொடர்ச்சியாக ஆறு சிக்சர்கள் அடித் தால் ரவி சாஸ்திரி கெரி சோபர்ஸ் மற்றும் கிப்ஸ் சாதனை சமன் செய்ய முடியும் என்பதை உணர்ந்தேன்.

இச்சம்பவத்திற்கு பின்னர் ஸ்டூவர்ட் பிராட் உங்களிடம் பேசினாரா?

இல்லை இருபது- 20 தொடருக்கு முன்ன தாக நடந்த இங்கிலாந்து தொடரில் எனது பந்து வீச்சில் மாஸ்கரேனஸ் தொடர்ச்சியாக 5 சிக் சர்கள் அடித்தார். இந்த வேதனையை நான் சந்தித்துள்ளதால் ஸ்டூவர்ட் பிராட்டின் மன நிலையை நன்றாக புரிந்து கொண்டேன்.

உங்களால் இதை மீண்டும் சாதிக்க முடி யுமா?

தெரியவில்லை இதுவரை எந்த ஒரு வீர ரும் இச்சாதனையை இரு முறை புரிந்த தில்லை. கிரிக்கெற்றில் எதுவும் நடக்கலாம் எனி னும் எனது பந்துவீச்சில் யாரும் தொடர்ச்சியாக 6 சிக்சர்கள் அடிக்க கூடாது என்பதே விருப்பம்.

பயிற்சியாளர் பந்துவீச்சில் கரி கிரிஸ்டன் பற்றி?

மிகச் சிறந்த வீரர் மேலும் சகஜமாக பழகக் கூடியவர் அவருடன் இணைந்து பணியாற்ற தயாராக உள்ளோம். இந்திய அணிக்கு பயிற்சி அளிப்பது சுலபமல்ல.

உங்களை விட குறைந்த அனுபவமே உடைய தோனிக்க அணித்தலைவர் பதவி வழங்கப்பட்டதால் அவர் மீது உங்களுக்கு கோபம் உள்ளது என்பது பற்றி?

இது உண்மை அல்ல நாங்கள் இது குறித்து பேசிய தில்லை. நாங்கள் இருவரும் நல்ல நண் பர்கள் .இருவரும் களத்தில இணைந்து செயல் பட. மிகவும் விரும்புவோம்.

ஆராய்ச்சியாலும் அநுபவத்தாலும் பகுத்தறிவாலும் உண்மையை கண்டுபிடிக்க வேண்டும்.

– இங்கர்சால்

வலம்புரி

வரவு செலவுத்திட்டத்தை மக்கள் மறந்து விடமாட்டார்கள்

வரவு செலவுத்திட்டத்தில் அரசு வெற்றி பெற்று விட்டது. அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையே நிலவிய பலப்பரீட்சையின் முடிவில் அரசின் வெற்றி அறிவிக்கப்பட்டாலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்ட முறையினை மக்கள் ஒருபோதும் மறந்து விடமாட்டார்கள் என்பது நிறுத்திட்டமான உண்மை.

கப்பங்களும் ஆட்கடத்தல்களும் கட்சி மாறல்களும் கொள்கை மீறல்களும் எனப் பல்வேறு மோசடிகள், ஊழல்கள் மத்தியில் வரவு செலவுத்திட்டம் வெற்றி கண்டது. எனினும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதத்தை மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

குறிப்பாக அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தார். ஆனால் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அநுராவின் அமைச்சுப்பதவியை பறித்தபோது அவர் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தால் அதனை வரவேற்க முடியும். அல்லது மங்கள சமரவீர புதிய கட்சியை ஆரம்பித்த போது அந்தக் கட்சியில் சேர்ந்திருந்தால் அநுராவை பாராட்டியிருக்கலாம்.

இதை விடுத்து வரவு செலவுத்திட்டத்தின் மீதான வாக்கெடுப்பின்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டு வாக்களிக்காமலும் ஒதுங்கிக் கொண்டமை அர்த்தபுஷ்டி இல்லாததும், அரசியல் ஒழுங்கற்றதும் ஆகும். இரண்டு பிரதமர்களின் மகனான அநுரா பண்டாரநாயக்கவின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் அவரின் அரசியல் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இதேபோல், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவர், ரவூவ் ஹக்கீமின் பாதையில் செல்லாமல் கிடைத்ததைப் பெரிதாக நினைத்து அரச பக்கம் அமர்ந்து விட்டார்கள். தமது கட்சி எடுத்த முடிவை உதாசீனம் செய்து விட்டு பதவிக்காக ஆசனங்களை பற்றிக் கொள்ளும் இவர்கள் மீண்டும் ஓர் பொதுத் தேர்தலில் மக்கள் முன் தோன்றுவது எங்ஙனம்?

நாடாளுமன்ற உறுப்பினர்களாகிவிட்டால் மீண்டும் பொதுமக்களை சந்திக்கவேண்டி வராது என கொள்ளுவது நியாயமாகாது. இத்தகைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

இந்த வரிசையில் ஜே.வி.பியின் ஒட்டுமொத்த எம்.பிக்களையும் எடுத்துக்கொள்ளலாம். பொது மக்களை ஏமாற்றி இனப்பிரச்சினையை மேலும் மோசமாக்கி, சமாதான முயற்சியை நாசமாக்கி விட்டு இப்போது பதவியை பற்றிப் பிடிக்க வாக்களிக்காமல் ஒதுங்கிக்கொண்டனர்.

இத்தகையவர்கள் நிச்சயம் 2008ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டத்தை ஞாபகப்படுத்திக்கொண்டே இருப்பார்கள். அந்த ஞாபகம் மக்கள் தீர்ப்பை நிச்சயம் ஒழுங்குபடுத்தும்.

ஆசையாக சாப்பிடும் தோசைக்கும் வரி செலுத்தும் பரிதாப நிலை

சபையில் ஐ.தே.க. எம்.பி. கபீர் ஹாசீம் கவலை

ஆசையாக சாப்பிடும் தோசைக்கும் வரிசெலுத்தும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை மாவட்ட எம்.பி. ஹபீர் ஹாசீம் சபையில் தெரிவித்தார்.

சைவக்கடை முதலாளிமார் தாங்கள் தோசைக்கு வரி செலுத்துகின்றோம் என கவலை தெரிவிப்பதுடன் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்றும் கூறுகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

பணவீக்கம் நூற்றுக்கு 20 வீதமாக அதிகரித்துள்ளது. மஹிந்த சிந்தனை என்று கூறப்பட்ட காலத்திலிருந்தே பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து வருகின்றது.

பொருளாதார சுமை அதிகரித்துள்ளது. அபிவிருத்தி கொழும்பில் மாத்திரம் தான் இடம்பெறுகிறது . கிராமப்புறங்களில் இல்லையென்று நிதி அமைச்சின் செயலாளர் கூறுகிறார். இது தான் மஹிந்த சிந்தனையாகும்.கொழும்பில் மட்டும் தான் அபிவிருத்தி நடைபெறுகிறது.

ஆட்சியாளர்களை மேலும் வளமாக்கும் வரவு -செலவுத் திட்டத்தில் ஏழைமக்களுக்கு எத்தகைய சிபார்சுகளும் இல்லை. ஏழை மக்களின் எண்ணிக்கையும் வறுமையும் அதிகரிக்கின்றது.

வரிகளை விதித்து வருமானத்தை அதிகரிக்க அரசு முற்படுகின்றது. போட்டி போட்டுக்கொண்டு கடனாக சர்வதேச வங்கிகளிடமிருந்து பெறும் பணத்தை எங்கே ஒழித்து வைத்திருக்கின்றீர்கள் . கண்மூடித்தனமாக பணத்தை அச்சிட்டு நாட்டில் பணவீக்கத்தை ஏற்படுத்துகின்றீர்கள். (அ-5)

யாழ். மாவட்ட அபிவிருத்திக்காக 4.18 மில்லியன், சுரேஸ் எம்.பி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 9பிரதேச செயலாளர் பிரிவுகளில் 37 அபிவிருத்தித் திட்டங்களுக்கென பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 4.18 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

யாழ்.மாவட்டத்திற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத்திட்ட நிதியிலிருந்து இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சங்கானையில் ஒரு அபிவிருத்தி திட்டத்திற்கென ஒரு இலட்சம் ரூபாவும், சாவகச்சேரியில் 4 அபிவிருத்தித் திட்டங்களுக் கென 3 இலட்சம் ரூபாவும்,யாழ்ப்பாணத்தில் 3அபிவிருத்தித்திட்டங்களுக்கென 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் கோப்பாயில் 19அபிவிருத்தித் திட்டங்களுக்கென 29 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், நல்லூரில் 3அபிவிருத்தித்திட்டங்களுக்கென 5 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறையில் 2 அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஒரு இலட்சத்து 50ஆயிரம் ரூபாவும்,சண்டிலிப்பாயில் 2 அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், தெல்லிப்பழையில் ஒருஅபிவிருத்தித் திட்டத்திற்கென 50 ஆயிரம் ரூபாவும்,உடுவிலில் 2 அபிவிருத்தித் திட்டங்களுக்கென 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (அ-5)

சென்னையில் கைதானவர்களின் தடுப்புக் காவல் மேலும் நீடிப்பு

(சென்னை)

கம்பியூட்டர் உதிரி பாகங்களை விமானம் மூலம் கடத்த முயன்ற போது கைது செய்ததாக தெரிவிக்கப்பட்ட யாழ். இளைஞர்களின் தடுப்புக்காவல் மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் கடந்த 8ஆம் திகதி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஜெயக்குமார் (34), ஜேம்ஸ் (46) ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இதில் புழல் சிறையில் அடைக்கபட்டிருந்த ஜெயக்குமார் மற்றும் ஜேம்ஸ் ஆகிய இருவரும் நேற்று முன்தினம் தாம்பரம் நீதி மன்றத்தில் நீதிபதி முருகேசன் முன்பு க்யூ பிரிவு பொலிஸார் ஆஜர்படுத்தினர். அவர்களின் காவலை வரும் 19ஆம் திகதி வரை நீடித்து நீதிபதி உத்தரவிட்டார். இதனை தொடர்ந்து அவர்கள் மீண்டும் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர். (அ-5)

புலிகளை ஆதரிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இளங்கோவன் வலியுறுத்தல்

(சென்னை)

விடுதலை புலிகள் இயக்கத்தை ஆதரிக்கும் அரசியல் கட்சி தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய வர்த்தகத்துறை இணையமைச்சர் இளங்கோவன் தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட இயக்கத்தினரை ஆதரிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக டிஜிபி கூறியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த சில நாட்களுக்கு முன் விடுதலை புலிகள் இயக்கத்தினர் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளது பற்றி கருத்து கூறிய அவர் தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நட வடிக்கை குறித்து தமிழக அரசு விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும் கூறினார். (அ-5)

அரசுக்கெதிரான மூன்று பிரேரணைகள் ஐ.தே.க. மாநாட்டில் முன்னெடுக்கப்படும்

(தொடர்ச்சி)

ஜக்கிய தேசியக் கட்சியின் 52 ஆவது வருடாந்த மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிக்கு கம்பஹா மாநகரசபை மைதானத்தில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் மூன்று விசேட பிரேரணைகள் முன் வைக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளன. ஊழல் மோசடி நிறைந்த அரசாங்கத்தை தோல்வியடையச் செய்யவேண்டும், அதற்கான தொடர் மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப் பட வேண்டும். குறைந்த வட்டிக்கு கடன் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தை கைவிட்டு அதிக வட்டிக்கு எச்.எஸ். பி.சி. வங்கியில் கடன் பெற்றமை நிராகரிப்பது போன்ற முக்கிய பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதோடு கண்டி விசேட மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளை முன்னெடுப்பது தொடர்பிலும் அதிக கனம் செலுத்தப்படவுள்ளது.

அதேநேரம் 2008 ஆம் ஆண்டிற்கான கட்சியின் நிறைவேற்றுக் குழு உட்பட ஏனைய குழு உறுப்பினர்களும் நியமிக்கப்படவுள்ளனர். (அ-5)

இலங்கைப் பொலிஸார் அனுமதி கோரி இந்திய மத்திய அரசுக்கு கடிதம்

(சென்னை)

தமிழகத்தில் கைதான விடுதலைப்புலிகளிடம் விசாரணை நடத்த அனுமதி கோரி இலங்கை பொலிஸார் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு படகுகள் மற்றும் ஜிபிஆர்எஸ் உபகரணங்கள் கடத்தியது தொடர்பான வழக்கில் விடுதலைப் புலிகளின் கடல்புலிகள் பிரிவைச் சேர்ந்த ஜெயக்குமார் (எ) கௌரிசங்கர் (34) ,ஜேம்ஸ் (எ) ராஜா (49) வை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்தனர். இந்நிலையில் இவர்கள் இருவரிடமும் விசாரணை நடத்துவதற்காக இலங்கைப்பொலிஸார் திட்டமிட்டுள்ளனர். இது தொடர்பாக இருவரிடமும் விசாரிக்க அனுமதி கோரி மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

மத்திய அரசின் அனுமதி கிடைத்த பிறகு இலங்கை பொலிஸார் சென்னை வருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தகவலை சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகம் உறுதி செய்தது. (அ-5)

பகைவருக்கு அன்பு; வெறுப்பவருக்கு நன்மை இதுவே நமது வாழ்வாதாரமாய் அமையட்டும்

பிறர் புகழ வேண்டும் என்பதற்காக அறச் செயல்களை அனைவர் முன்னிலையில் வெளிப்படையாக செய்பவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். தர்மம் இறைவேண்டல் நோன்பு என்ற மூன்றும் சிறந்த அறச்செயல்களாக யூத மரபில் மதிக்கப்பட்டன. இந்த செயல்களை செய்ய முன்வருபவர் இறைவனுக்காக செய்ய வேண்டுமே தவிர மற்றவர்கள் தன்னை மதிக்க வேண்டும் என்பதற்காக செய்தால் அதற்கான நற்பலன் அவருக்கு கிடைக்காமல் போய்விடும்.

பரிசேயர் காட்டிய பாதை

தர்மம் செய்யும் போது வலது கை கொடுப்பது இடது கைக்கு தெரியாமல் இருக்க வேண்டும் என்று இயேசு வலியுறுத்தியுள்ளார். தான் செய்யும் தர்மம் மற்றவர்களுக்கு தெரிய வேண்டும் அதன் மூலம் தன்னை உயர்ந்தவர் என்று பிறர் மதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவருக்கு அதற்கான நற்பலன் அவர் சார்ந்துள்ள மனிதர்களிடமிருந்தே அவருக்கு கிடைத்து விடுகிறது. இறைவனிடமிருந்து அவர் எதிர்பார்த்த அருள்கொடை இதனால் தடைப்பட்டு விடும்.

ஆலயங்களில் பிறர் கேட்க வேண்டும் என்பதற்காக சிலர் வாய் விட்டு தங்கள் பிரச்சினைகளை பெருமைகளை இறைவனிடம் சொல்லிக் கொண்டிருப்பர். இதுவும் தேவையில்லை என்கிறார் இயேசு. உனது தேவைகள் எதிர்பார்புகள் அனைத்தும் இறைவனுக்கு தெரியும். எனவே இறைவன் முன்னிலையில் உன்னை பெருமிதப்படுத்துவதை தவிர்த்துவிட்டு உன் குறைகளை களைவதற்கான வழிமுறைகளை கேள். செய்த பாவங்களை மன்னிக்குமாறு வேண்டு. மற்றவர்களை மதிக்கும் பண்பை கொடுக்குமாறு மன்றாடு. உனது வேண்டுதல்கள் இறைவனால் நிறைவேற்றப்படும். நீ ஆசிர்வதிக்கப்பட்டவனாக மன நிறைவோடு இல்லத்திற்கு திரும்பலாம்.



நோன்பு காலத்தில் மற்றவர்களின் பரிதாபத்தை எதிர் பார்த்து உன்னை தாழ்த்திக் கொள்ளாதே. நீ நோன்பு இருப்பது எவருக்கும் தெரிய வேண்டாம். இறைவனுக்கு மட்டுமே ஏற்புடையவனாக இரு என்கிறார் இயேசு.

பகைவருக்கு அன்பு. வெறுப்பவருக்கு நன்மை. சபிப்பவருக்கு ஆசிர். இகழ்பவருக்குஇறைவேண்டல். இதுவே நமது வாழ்வாதாரமாய் அமையட்டும்.

இளம் விஞ்ஞானிகள் விருது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறை தலைவரான கலாநிதி நாகலிங்கம் சிவயோகன் விஞ்ஞானத் துறையில் ஆற்றிய அதியுயர் ஆக்கப்பணிகளுக்காக தேசிய விஞ்ஞான தொழில் நுட்ப ஆணைக் குழுவினால் இளம் விஞ்ஞானிகள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

இவருக்கான விருது எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொழும்பு கைத் தொழில் தொழில் நுட்ப நிறுவனத்தில் (Industrial Technology Institute) வழங்கப்பட வுள்ளது.

இவரது ஆக்கங்கள் பல வலம்புரி, சங்கு நாதம் இதழ்களில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

பாதுகாப்பை கருத்தில் கொண்டே ஜே.வி.பி பட்ஜெட்டை புறக்கணித்தது

ஜ.தே.கட்சி கூறுகிறது

(கொழும்பு)

தனிப்பட்ட பாதுகாப்பை கருத்தில் கொண்டே மக்கள் விடுதலை முன்னணி நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பை பகிஷ்கரித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ரம்புக்வெல தொகுதி அமைப்பாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தின் ஊழல்களுக்கும் மோசடிகளுக்கும் எதிராக கதைக்கும் அனைவரும் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப, அவர்களை நாடாளுமன்றில் தோல்வியடையச்செய்ய வேண்டும்.

மனச்சாட்சிக்கு ஏற்றவகையில் அதனை நிறைவேற்றுமாறு மக்கள் விடுதலை முன்னணிக்கு கூறியதாக அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி அதனை உரிய முறையில் நிறைவேற்றிய போதிலும் மக்கள் விடுதலை முன்னணி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தை பாதுகாத்ததுடன் வேண்டிய திருத்தவேலையை செய்ய இடமளித்துள்ளதாகவும் தெரிவித்தார். (எ)

விடைத்தாள் திருத்தும் பணி நாளை முதல் ஆரம்பம்

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி நாளை ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

விடைத்தாள் திருத்தும் பணிக்காக 105 பாடசாலைகள் பயன்படுத்தப்படும் 40 ஆயிரம் பரிசோதகர்கள் இதற்காக ஈடுபடுத்தப் படுவர்.

இம்முறை பரீட்சை விடைத்தாள் திருத்தும் பாடசாலைகளுக்கு ஏனைய பாடசாலைகளை விட ஐந்து நாட்கள் மட்டுமே விடுமுறை விடப்படும். விடைத்தாள் திருத்தும் பணி அடுத்த மாதம் 10 ஆம் திகதியுடன் முடிபடையும் என அவர் தெரிவித்தார். (சி)

அரசைக் காப்பாற்றிய கட்சிகளுக்கு ஜனாதிபதி மகிந்த நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

திரைமறைவில் மேற்கொள்ளப்பட்ட பல சதித்திட்டங்களுக்கு மத்தியிலும் இந்தக் கட்சிகள் அரசாங்கத்தை பலப்படுத்தியிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த வெற்றி அனைத்து மக்களது வெற்றி எனவும் அரசாங்கம் பயங்கரவாதத்தை தோற்கடிக்க இது உதவியாக இருக்கும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வரவு செலவுத்திட்டத்தின் முதல் 10 வருட காலப் பாரிய திட்டத்திற்கு அமைய பல அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் எண்ணியுள்ளது.

நாட்டின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு அரசாங்கத்துடன் கைகோர்த்து செயற்படுமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். (சி)

மன்னாரில் ஷெல் வீச்சு படைச் சிப்பாய் பலி மேலும் 11 பேர் காயம்

(கொழும்பு)

மன்னார் நொச்சிக்குளத்தில் உள்ள படையினரின் நிலைகள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய எறிகணைத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதோடு மேலும் 11 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் நடத்தப்பட்ட எறிகணை வீச்சிலேயே படையினருக்கு இந்த இழப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்துள்ளது. (எ-5)

வடக்கு-கிழக்கு இடைக்கால...

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 13-வது அரசியல் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. இலங்கையின் 60-வது சுதந்திர தின விழாவில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்கிறார்.

அவர் இலங்கை வருவதற்கு முன்னதாக 13-வது அரசியல் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியாகவுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

எனினும் தான் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் 13-வது அரசியல் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமென மன்மோகன் சிங், இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம ஊடாக அறிவித்தாக விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை 13-வது அரசியல் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்திய பின்னர் வடக்குக் கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை தனித்தனியாக ஏற்படுத்தி அதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஒப்படைக்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளதாகவும் ஜனாதிபதி செயலகத்தின் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியிடம் ஒப்படைக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்தியை மறுத்துள்ள ஜனாதிபதி செயலகம் அதனை அமைச்சர் டக்ளஸே நிர்வகிப்பார் என்றும் கூறியுள்ளது.

இதேவேளை 13-வது அரசியல் திருத்தச் சட்டத்தில் மேலதிக அதிகாரங்களை இணைப்பதற்குத் தற்போதுள்ள அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமையால் மேலதிக அதிகாரங்களை இணைக்காமலேயே அதனைஅமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (சு-5)

யாழ்ப்பாணத்தில் இருந்து

பூநகரி நோக்கி ஷெல் தாக்குதல் 14 பாடசாலைகள் இடமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு தெற்கே பூநகரிப் பிரதேசத்தை நோக்கி யாழ்.குடாநாட்டில் இருந்து இராணுவத்தினர் நடத்திவரும் எறிகணை மற்றும் பல்குழல் பீரங்கித் தாக்குதல்கள் காரணமாக இப்பகுதியில் உள்ள 29 பாடசாலைகளில் 14 பாடசாலைகள் இடம்பெயர்ந்துள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த பாடசாலைகள் ஜெயபுரம், செம்மண்குன்று, முட்கொம்பன் ஆகிய பகுதிகளில் உள்ள வேறு பாடசாலைகளுடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் இதனால் அந்த பாடசாலைகளில் இடநெருக்கடியும் வசதியீனமும் ஏற்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய மாரிகால பருவ மழை கரணமாக இடநெருக்கடியோடு இந்த மாணவர்கள் மேலும் பல அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சு-5)

ஈராக்கில் கைது...

வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்கள் ஈராக்கிற்கு விஜயம் செய்தமை தொடர்பாக விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (சு)

புலிகள் மீதான...

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புலிகள் மீதான தடையை எச்சந்தாப்பத்திலும் நீக்க இந்திய அரசு அனுமதிக்காது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (சு-5)

மூடக்களப்பு...

கடத்திச் செல்லப்பட்டனர்.

இந் நிலையில் மூன்று எம்.பிக்களும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத நிலையில் அவர்களது உறவினர்கள் மற்றும் செயலாளர் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்களின் விடுதலை குறித்து ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

பாகிஸ்தானில் நெருக்கடி...

டிசம்பர் 15 ஆம் திகதி நெருக்கடி நிலை இரத்துச் செய்யப்படும் என்றும் அறிவித்தார்.

அதன்படி நேற்று நெருக்கடி நிலை இரத்துச் செய்யப்படுவதற்கான உத்தரவை முஷாரப் பிறப்பித்தார். நெருக்கடி நிலை இரத்துச் செய்யப்பட்டாலும் பத்திரிகைகள் மீதான கட்டுப்பாடு தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வீட்டுச் சிறையில் இருக்கும் நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்கள் விடுவிக்கப்படமாட்டார்கள் என்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்நிலையில் நெருக்கடி நிலையை இரத்துச் செய்வதற்கான உத்தரவை முஷாரப் நேற்றுப் பிறப்பித்துள்ளார்.

முடக்கி வைக்கப்பட்டிருந்த அந்த நாட்டு அரசியல் சாசனமும் மீண்டும் செயற்படத் தொடங்கும் என்று அவர் கூறியுள்ளார். (சு-5)

புதிய துணைவேந்தராகப் பதவியேற்கும்
பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கனை
அவர்களை இதயம் கனிய பாராட்டுகிறோம்!

கடந்த 07.12.2007 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தினால் யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராகப் பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன் நியமிக்கப்பட்டதை ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்தது. இவர் இந்தப் பதவியில் நியமிக்கப்பட்ட வுடனேயே ஜேர்மன் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இருவார கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக மறுநாள் 08.12.2007 சனிக்கிழமை ஜேர்மனிக்குப் பயணமானார்.

ஜேர்மன் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இருவார காலக் கருத்தரங்கை முடித்துக் கொண்டு எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை நாடு திரும்பவுள்ள இவர், எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுத் தலைவர் பேராசிரியர் சாமினி சுமரநாயக்கா முன்னிலையில் கொழும்பில் துணைவேந்தராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வார். துணைவேந்தராக நியமிக்கப்பட்டவுடனேயே வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றுக்குச் சென்ற முதலாவது துணைவேந்தர் என்ற பெருமையும் இவரையே சாரும்.

முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் துரைராஜா, பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் காட்டிய வழியில் எமது பல்கலைக் கழகத்தை அபிவிருத்தி செய்து சுகல பீடங்களையும் இங்கு உருவாக்கி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தரத்துக்கு உயர்த்த வேண்டுமென இறையருளை வேண்டுகின்றோம்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா அவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தின்போது, பேராசிரியர் துரைராஜா, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைத் தனது இருதயமாகவும், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தை தனது வலது கையாகவும், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தை தனது இடது கையாகவும் கொண்டதால் அவர்களது ஒத்துழைப்புடன் பல்கலைக்கழகத்தை திறம்பட நடத்த முடிந்தது எனக் குறிப்பிட்டதை இச் சுந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்து, அவர் வழியில் புதிதாகப் பதவியேற்கும் பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன் அவர்களும் செயற்பட்டு எமது பல்கலைக்கழகத்தின் தரத்தையும் புகழையும் நிலை நிறுத்துவார் என்ற நம்பிக்கையுடன் புதிய துணைவேந்தர் அவர்களை வருக, வருக என வரவேற்கின்றோம்.

வலிகாமம் பகுதி
இணுவையூர் தாவடியூர் மக்கள்

(641)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிரவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.